உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௩] தாது௵ சித்திரை௴ [பகுதி-௬.
Vol. XXXIII. April-May 1936. No. 6.

உள்ளுறை.

நியாயப்பிரவேசமணிமேகலை:—பத்திராசிரியர். கசகூ—கரு௲
கம்பராமாயண இன்கவித்திரட்டு:- } ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார் கருஎ—கசு௨
மதிப்புரை:— கசுஉ—கசுஅ
சடையவர்மன் குல சேகரபாண்டியன்:- } ஸ்ரீமத். துடிசைகிழார், அ. சிதம்பரனார். கசுரு—கஎஉ
சிராமலைக்கோவை:- (குறிப்புரையுடன்) } ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி - டாக்டர் உ. வே. சாமிநாதையர். 73—80
சூடிக்கொடுத்தநாய்ச்சியார் தோத்திரப்பாமாலை மூலமும் உரையும்:— } ஸ்ரீமத். ரெ. அப்புவையங்கார். 25-32
குருகைமான்மியம்:—T. K. இராமாநுஜையங்கார். 321—328
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவுகணக்கு:—

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1936.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA SETHUPATHY AVL., and
Published by THIRU. NARAYANA IYENGAR at ngam Power Press,
No. 54, New Jail

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
*7.	தோத்திரத்திரட்டு			
*8.	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய முதற்பாகம்.	6	0	0
*	ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
*9.	அபிதானசிந்தாமணி			
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௩] தாது௵ சித்திரைமீ [பகுதி-௬.

Vol. XXXIII. April-May 1936. No. 6.

நியாயப்பிரவேச மணிமேகலை.

[௧௨அ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

திருட்டாந்தப்போலி.

இனி, திருட்டாந்தாபாசம் சொல்லப்படும். அது, (1) சாதர்மிய திருஷ்டாந்தாபாசம், (2) வைதர்மிய திருஷ்டாந்தாபாசம் என இருவகைப்படும்.

சாதர்மியமாவது: தர்மங்களுடன் கூடியது. தர்மங்களாவன.— எடுத்துக்காட்டுந் திருஷ்டாந்தங்களுக்கு விசேஷணமாயுள்ள சாதந சாத்தியங்களாம். ஆகவே, சாதந சாத்திய தர்மங்களுடன் கூடிய திருஷ்டாந்தம் சாதர்மியதிருஷ்டாந்தம் எனப்படும். அது குற்ற முடையதாயின் சாதர்மியதிருஷ்டாந்தாபாசமாம்.

இதற்கு மறுதலையான சாத்திய சாதநதர்மங்களின் இன்மை யுடன்கூடிய திருஷ்டாந்தம் வைதர்மியதிருஷ்டாந்தம். இது குற்ற முடையதாயின் வைதர்மியதிருஷ்டாந்தாபாசமாம். ஆபாசம் போலி என்பன ஒருபொருட்சொற்கள்.

சாதர்மிய திருஷ்டாந்தமும் வைதர்மிய திருஷ்டாந்தமும் தனித் தனி ஐந்தைந்துவகையாகச் சொல்லப்படும்.

[அங்ஙனம்சொல்லப்படுமிடத்துச் சாதர்மியதிருஷ்டாந்தாபாச வகை ஐந்தனுள் முதன்மூன்றினையும் நியாயப்பிரவேசநூலுடையார் முறையே சாதநதர்மாசித்தம், சாத்தியதர்மாசித்தம், உபயதர்மாசித்தம் என அசித்தபதத்தாற் பெயரிட்டிருக்கிறார். மணிமேகலையாசிரியர் அவற்றை முறையே சாதநதன்மவிகலம், சாத்தியதன்மவிகலம், உபயதன்மவிகலம் என விகலபதத்தாற் பெயரிட்டுவழங்குகின்றார். இவை தம்முள் வேறுபட்டன.]

நியாயப்பிரவேசத்தில் இவை வருமாறு:—

𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤𑌾𑌭𑌾𑌸𑍋 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌃। 𑌸𑌾𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑍇𑌣 𑌵𑍈𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑍇𑌣 𑌚। 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌾𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑍇𑌣 𑌤𑌾𑌵𑌦𑍍 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤𑌾𑌭𑌾𑌸𑌃 𑌪𑌞𑍍𑌚𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌃 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾। (1) 𑌸𑌾𑌧𑌨𑌧𑌰𑍍𑌮𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌃, (2) 𑌸𑌾𑌧𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌃, (3) 𑌉𑌭𑌯𑌧𑌰𑍍𑌮𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌃, (4) 𑌅𑌨𑌨𑍍𑌵𑌯𑌃, (5) 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌨𑍍𑌵𑌯𑌶𑍍𑌚𑍇𑌤𑌿।

இதன்பொருள்: 'திருட்டாந்தப்போலி சாதர்மியமெனவும், வைதர்மியமெனவும் இரண்டுவகைப்படும். அவற்றுள் சாதர்மிய திருட்டாந்தப்போலி ஐந்துவகைப்படும். அஃதெங்ஙனமெனில் சாதநதர்மாசித்தம், சாத்தியதர்மாசித்தம், உபயதர்மாசித்தம், அநந்நுவயம், விபரீதாந்நுவயம் என்பனவாம்' என்றவாறு.

[இங்கு வைதர்மிய திருஷ்டாந்தாபாசப்பெயர்கள் சொல்லப்படவில்லை. மணிமேகலையில் அவையும் உடன்சேரச் சொல்லப்பட்டுள்ளன. இதுவும் ஒரு வேறுபாடு.]

மணிமேகலையுள் இவை வருமாறு:—

'......தீய வெடுத்துக்காட் டாவன
தாமே திருட்டாந்த வாபா சங்கள்
திருட்டாந் தம்மிரு வகைப்படு மென்றுமுற்
கூறப் பட்டன விங்க வற்றுட்
சாதன் மியதிருட் டாந்தவா பாசம்
ஓதி லைந்து வகையுள தாகுஞ்
சாதன தன்ம விகலமுஞ் சாத்திய

தன்ம விகலமு முபய தன்ம
விகலமு மநன்னு வயம்விப ரீதான்
னுவய மென்ன வைதரு மியதிருட்
டாந்த வாபா சமுமை வகைய
சாத்தி யாவி யாவி ருத்தி
சாத னுவி யாவி ருத்தி
யுபயா வியாவிருத்தி யவ்வெதி ரேகம்
விபரீத வெதிரேக மென்ன......' (௫௨௬—௫௪0)

என்பது.

இதனுள், 'தீயவெடுத்துக்காட் டாவன தாமே திருட்டாந்த வாபாசங்கள்' என்றது நிறுத்தமுறையே திருட்டாந்தப்போலிகளி னிலக்கணங்கூறுகின்றது.

இதன்பொருள்: திருட்டாந்தப்போலிகளாவன—குற்றமுள்ள திருட்டாந்தங்கள் என்றவாறு.

திருட்டாந்தவாபாசங்களென்றது நுவல்பொருளின்பெயர்.

திருட்டாந்தம், எடுத்துக்காட்டு, உதாரணம் என்பன ஒரு பொருட்சொற்கள். ஆபாசம் - போலி.

தாமே என்பது கட்டுரைச்சுவைப்படநின்றது.

தீயவெடுத்துக்காட்டு என்றது அந்நுவல்பொருளினிலக் கணங் கூறியவாறு. இதனுல், குற்றமுடைமை அவற்றிற்கு இலக் கணமென்பது பெறப்பட்டது. (அக்குற்றங்கள் பின்பு கூறப்படும்.)

[இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்தில் இல்லை.]

'திருட்டாந்தம் இருவகைப்படுமென்று முற்கூறப்பட்டன' என்றது 'ஏதமி றிட்டாந் தம்மிரு வகைய, சாதன்மியம் வைதன் மியம் என' (௧௫௬, ௧௫௭-ஆம் அடிகள்) என்று முன்பு சாதன வுறுப்புள் கூறியிருப்பதை நினைப்பூட்டியவாறு. அவற்றை 'ஏதமி றிட்டாந்தம்' என்று சிறப்பித்தமையால் இவை ஏதமுள்ள திருட் டாந்தப்போலிகளாம் என்க.

'இங்கவற்றுட் சாதன்மியதிருட்டாந்தவாபாசம், ஓதிலைந்து வகையுளதாகும்' என்பதனுள் 'இங்கு' என்றது திருட்டாந்தப் போலிநிரூபணம்பண்ணுமிடத்து என்றபடி.

அவற்றுள் என்றது 'எதமிறிட்டாந்தம் இருவகைய' என்பதனுற் பெறப்பட்ட சாதன்மியதிருட்டாந்தப்போலியும் வைதன்மிய திருட்டாந்தப்போலியுமா மிவற்றுள் என்றபடி.

'சாதன்மியதிருட்டாந்தவாபாசம் ஓதிலைந்து வகையுள தாகும்' என்றது சாதன்மியதிருட்டாந்தப்போலிவகையின் தொகை கூறிய வாறு.

ஓதில் என்று மிகுத்துச்சொல்லியவதனுல் உபயதன்மவிகலம், சன்னும் அசன்னுமாகிய வேறுபாட்டால் ஐந்திறந்துவருவதும் உண்டென்பது குறிப்பாயிற்று.

சாதனதன்மவிகலமுதல் விபரீதான்னுவய மீருயுள்ளன அவ்வைவகையான சாதன்மியதிருட்டாந்தப்போலிகளின் பெயர்களாம்.

எனவென்னும் எண்ணிடைச்சொல் திரிந்து என்னவென நின்றது; அதனை அநன்னுவயத்தோடும் கூட்டுக.

'வைதன்மியதிருட்டாந்தமுமைவகைய' என்றது வைதன்மிய திருட்டாந்தவகையின் தொகைகூறியவாறு. உம்மையால் சாதன்மியதிருட்டாந்தப்போலிபோல் வைதன்மியதிருட்டாந்தப்போலியும் ஐந்தாதலேயன்றி ஐந்திறந்துவருதலும் உண்டென்பது குறிப்பாயிற்று.

சாத்தியாவியாவிருத்திமுதலைந்தும் அவ்வைந்தின்பெயராம் என்க.

எனவென்னும் எண்ணிடைச்சொல் என்னவெனத் திரிந்து நின்று பெயர்தொறுமியைய அப்பெயர்கள் ஐவகைய என்னும் பயனிலைகொண்டன.

[நியாயப்பிரவேசத்தில் இவ்வாறு இருவகைத் திருட்டாந்தப்போலிகளின் பெயர்களை ஒருங்குசேரக் கூறுதலில்லை. இது ஒரு வேறுபாடு. அன்றியும், வைதர்மியதிருஷ்டாந்தத்தின் முதன்மூன்றுபெயர்களும் மணிமேகலையில் சாத்தியாவியாவிருத்தி, சாதநாவியாவிருத்தி உபயாவியாவிருத்தி என்று சொல்லப்பட்டுள்ளன. நியாயப்பிரவேசத்தில் அவை முறையே சாத்தியாவியாவிருத்தம், சாதநாவியாவிருத்தம், உபயாவியாவிருத்தம் என்று சொல்லப்பட்டுள்ளன. இவையும் ஒரு வேறுபாடு.]

I சாதன்மியதிருட்டாந்தப்போலி.

1. சாதநதர்மாசித்தம்.

இனி நியாயப்பிரவேசத்தில் நிறுத்தமுறையே சாதர்மியதிருஷ்டாந்தாபாசநிரூபணம் செய்யத்தொடங்கி முதற்கணின்ற சாதநதர்மாசித்தம் சொல்லப்படும்.

𑌤𑌤𑍍𑌰 𑌸𑌾𑌧𑌨𑌧𑌰𑍍𑌮𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑍋 𑌯𑌥𑌾 ।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌶𑌬𑍍𑌦𑍋𑌽𑌮𑍂𑌰𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌪𑌰𑌮𑌾𑌣𑍁𑌵𑌤𑍍 ।
𑌯𑌦𑌮𑍂𑌰𑍍𑌤𑌂 𑌤𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌂, 𑌯𑌥𑌾 𑌪𑌰𑌮𑌾𑌣𑍁𑌃 ।
𑌪𑌰𑌮𑌾𑌣𑍌 𑌹𑌿 𑌸𑌾𑌧𑍍𑌯𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌤𑌿,
𑌸𑌾𑌧𑌨𑌧𑌰𑍍𑌮𑍋𑌽𑌮𑍂𑌰𑍍𑌤𑌤𑍍𑌵𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿,
𑌮𑍂𑌰𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌪𑌰𑌮𑌾𑌣𑍂𑌨𑌾𑌮𑌿𑌤𑌿 ।

[இதனுள் '𑌪𑌰𑌮𑌾𑌣𑍁𑌵𑌤𑍍' என்ற சொல் மிகைபட்ட பிழையாயிருப்பதால் அதனையொழித்து உரைவரையப்படுகிறது.]

இதன் பொருள்: 'அவற்றுள், சாதநதர்மாசித்தமெங்ஙனமெனில் "சத்தம் நித்தியப்பொருள்; அமூர்த்தப்பொருளாதலால்; யாதொன்று அமூர்த்தப்பொருளோ அது நித்தியப்பொருளாகக் காணப்பட்டது, பரமாணு எப்படியோ அப்படியே." பரமாணுவின்கண் சாத்தியதர்மமான நித்தியத்தன்மையுள்ளது; சாதநதர்மமான அமூர்த்தத்தன்மை இல்லை: பரமாணுக்களுக்கு அமூர்த்தத்தன்மையின்மையால் என்பது' என்றவாறு.

இதனுள், "சத்தம் நித்தியப்பொருள்;............பரமாணு எப்படியோ அப்படியே." என்றது உதாரணவாக்கியம். மேலுள்ளன விளக்கவுரை.

சாதநதர்மமான ஏதுப்பொருள் திருஷ்டாந்தத்தில் சித்திக்காமையால் இது சாதநதர்மாசித்தமெனப் பெயர்பெற்றது.

மணிமேகலையில் இது வருமாறு:—

'....................................இவற்றுட்
சாதன தன்ம விகல மாவது
திருட்டாந் தத்திற் சாதனங் குறைவது
சத்த நித்த மமூர்த்த மாதலான்
யாதொன்றி யாதொன் றமூர்த்தமது நித்த
மாதலாற் காண்புற் றதுபர மாணுவி
லெனிற்றி ருட்டாந் தப்பர மாணு
நித்தத் தோடு மூர்த்த மாதலாற்
சாத்திய தன்மநித் தத்துவ நிரம்பிச்
சாதன தன்மவமூர்த் தத்துவங் குறையும்'(௩௪௦-௩௪௯)

என்பது.

இதனுள் சாதனதன்மவிகலமாவது என்றது சாதனதன்மவிகலமென்னும் திட்டாந்தப்போலியினிலக்கணமாவது என்றவாறு.

சாதனதன்மவிகலமென்னும் இலக்கியத்தின்பெயர் அதன் இலக்கணத்துக்கு ஆனமையால் ஆகுபெயராயிற்று.

'திருட்டாந்தத்திற் சாதனங்குறைவது' என்றது வாதியாற் காட்டப்பட்ட திருட்டாந்தப்பொருளில் அவனாற் சொல்லப்படும் ஏதுப்பொருள் இல்லையாதல் என்றவாறு.

[இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்தில் இல்லை.]

இனி இவ்விலக்கணமமைந்த உதாரணங்காட்டுவான் அதற்கு உறுப்பாகிய பக்ஷ சாத்திய ஏதுவசனங் கூறுகின்றார்; 'சத்தம்

நித்தம், அமூர்த்தமாதலால்' என்று. இதனுள், சத்தம் பக்ஷம்; நித்தமாதல் சாத்தியம் (-துணிபொருள்); அமூர்த்தமாதல் ஏதுப் பொருள். இவ்வேது சாதநதன்மமெனப்படும்.

'யாதொன்று யாதொன்று அமூர்த்தம், அது நித்தம்' என்றது வியாத்திவாசகம். இதனால் அமூர்த்தமாயிருப்பதெல்லாம் நித்தமாயிருப்பதெனத் துணிபொருளுணர்வை ஓடச்செய்தவாறு. அமூர்த்தம் - அளவுபட்ட வடிவுடையதல்லாதது.

ஆதலால் என்றது முற்கூறிய வியாத்திவாசகம் தட்டின்றிச் செல்லுதலால் என்றவாறு.

வியாத்திவாசகம் தட்டின்றிச்செல்லினும் திருட்டாந்தப் பொருள் காட்டப்படவேண்டுமென்னுங்கருத்தால் பரமாணுவைத் திருட்டாந்தமாகக்காட்டுவான் 'காண்புற்றது பரமாணுவில்' என்றார். 'காண்புற்றது' என்றது காணப்பட்டது என்றபடி. காணப்படும் பொருள் காண்பானது காணுதலை உறுதலால் காண்புற்றது எனப்பட்டது.

இங்குக் காட்சிக்குச் செயப்படுபொருள் வியாத்திவாசகத்தாற் சொல்லப்பட்ட சாதநசாத்தியங்களின் உடனிகழ்ச்சியே.

காண்புற்றது பரமாணுவில் என்றாராயினும் பரமாணுவிற் காணப்படுதலால் அப்பரமாணு திருட்டாந்தமாம் என்பது கருத்தாகக்கொள்க. (இதுகாறும் வாதிகூற்று.)

'எனில்' என்றது இதன்கணுள்ள குற்றங்காட்டுதற்கு அவ் வாதிகூற்றை அநுவதித்துக்கொண்டமைதோன்றநின்றது.

'திருட்டாந்தப்பரமாணு' என்றது 'சத்தம் நித்தம்; அமூர்த்தமாதலால்' என்ற அநுமானத்தில் திருட்டாந்தமாகக்காட்டப்பட்ட பரமாணு என்றவாறு.

'நித்தத்தோடு மூர்த்தமாதலால்' என்றது நித்தமாயிருத்தலோடு மூர்த்தமாயுமிருத்தலால் என, இது சாதநதன்மவிகலமாதற்குக் காரணங் காட்டியவாறு.

'சாத்தியதன்மநித்தியத்துவநிரம்பிச், சாதநதன்மவமூர்த்தத் துவங் குறையும்' என்றது பரமாணு நித்தமாயிருத்தலாற் சாத்திய தன்மநித்தியத்துவம் நிரம்பியதாயும், அமூர்த்தமாயில்லாமையால் (—மூர்த்தமாயிருத்தலால்) சாதநதன்ம அமூர்த்தத்துவம் இல்ல தாகியும் இருத்தலால் சாதநதன்மவிகலமாம் என்றவாறு.

பரமாணு, நித்தத்துவம் நிரம்பி அமூர்த்தத்துவம் குறையும் எனச் சினைவினைகொண்டுமுடிந்தது. குறையும் எனக் காரியம் காரணமாயுபசரிக்கப்பட்டது.

அமூர்த்தத்துவம் - அளவுபட்டவடிவுடையதாகாமை.

பரமாணு 'அணு' என்னும் அளவுபட்டவடிவுடையதாயிருத்த லால் மூர்த்தமாவதல்லது அமூர்த்தமாகாமையால் அமூர்த்தமாத லென்னும் சாதநதன்மம் அதன்கணின்மையால் இது சாதநதன்ம விகலமாயிற்று என்றறியத்தக்கது.

சாதநம், பக்ஷ சபக்ஷ திருஷ்டாந்தங்களுக்கு விசேடணமாத லால் அது சாதநதன்மமெனப்பட்டது. இது பண்புத்தொகை நிலைத்தொடர்மொழி. சாதநமாகிய தன்மமென விரியும். விசே டணங்களை விசேடியத்தின் தன்மமாகக்கொள்ளுதல் நியாயநூல் வழக்கு.

விகலம் - குறைந்தது (நிரம்பாதது) என்னும் பொருளில் வழங்கப்படும். சாதனதன்மத்தால் நிரம்பாதது (—குறைந்தது) சாதநதன்மவிகலம் என்பதாம்.

[இத்துணை விரிவான விளக்கம் நியாயப்பிரவேசத்தில் இல்லை.]

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[ருகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

பொழிலிறுத்தபடலம்.

அனுமான், இராவணன்காவற்காடாகிய அசோகவனத்தை அழித்ததைக் கூறுவது. (பொழில்-சோலை. இறுத்தல்-ஒடித்தல்.)

அனுமான், அரக்கரைப் போர்மூட்ட அசோகவனத்தை அழித்தல்.

[சீதையிடம் விடைபெற்றுச்சென்ற அனுமான், அவள் இருந்த அசோகவனத்தினூடே இராமன் இருந்த வடதிசைநோக்கி ஏகும்போது ஆலோசனையில் ஆழ்ந்து 'யான் இதுவரை செய்தன யாவும் எளியனவே. அரக்கரை அழித்து, இலங்கையை *இடந்து கடலிலெறிந்து சீதாபிராட்டியை இராமபிரான்திருவடிகளிற் சேர்த்தேனல்லேன். இது, எம்பிராட்டி விலக்கிய செயலாதலால், கிடக்க. இராவணனுடைய ஒருபதுதலைகளையும் இருபதுதோள்களையும் ஒருசேர எனது வாலினால் இறுக்கிப் பிணித்து நொறுக்கினேனில்லை. இராவணனை அழித்தல் இராமபிரான்செய்தற்பாலதாதலால், இதுவும் கிடக்க. இராவணனெதிரே, அவனுடைய பட்டத்தரசி மந்தோதரியைக் கூந்தலைப்பிடித்திழுத்துக்கொண்டு போய்ச் சிறைவைக்கவும் செய்யவில்லை. இது, அவன் பிராட்டியைக் கவர்ந்த இழிசெயல்போல்வதாமாதலால், இதுவுமே கிடக்க. இச்செயல்கள்போலன்றி, எதிரிகளான இராக்கதரைக் கொல்லுதல், எவ்வகை ஆட்சேபத்துக்கும் இடமில்லாதது. ஆதலால், அது செய்வேன். அதற்கு அவரை அறைகூவிப் போர்மூட்டும்பொருட்டு இந்த அசோகவனத்தை அழிப்பேன். அழிக்கும் ஆரவாரங்கேட்டு, அவர் வந்து எதிர்ப்பர். அப்போது, அவரெல்லாரையும் அழிப்பேன்' என்றெண்ணினான்.

அவ்வாறெண்ணியவன், தனது இயற்கைப்பெருவடிவத்தையெடுத்து அந்த அசோகவனத்து மரங்களைத் தனது மிகப்பெரிய கால்களால் துகைத்திடுவானானான்.]

---

* இடந்து - பெயர்த்து.

மரங்கள் அடைந்த பலவகை அழிவுகள்.

121. முடிந்தன; பிளந்தன; முரிந்தன; நெரிந்த;
மடிந்தன; பொடிந்தன; மறிந்தன; முறிந்த;
இடிந்தன; தகர்ந்தன; எரிந்தன; கரிந்த;
ஒடிந்தன; ஓசிந்தன; உதிர்ந்தன; பிதிர்ந்த.

இ-ள். (அனுமானுடைய காலால் துகைக்கப்பட்டுச் சில மரங்கள்) அழிந்தன; (சில) பிளந்தன; (வேறுசில) வளைந்தன; (மற்றும் சில) நெரிந்தன; (மேலும் சில) மடிந்தன; (விஞ்சிய சில) பொடிந்தன; (மீட்டும் சில) மடங்கின; (பெயர்த்தும் சில) முறிந்தன; (பின்னும் சில) இடிந்தன; (இன்னும் சில) உடைந்தன; (அன்றியும் சில) எரிந்தன; (அல்லாத சில) கரிந்தன; (மற்றைய சில) ஒடிந்தன; (பிற சில) துவண்டன; (ஏனைய சில) உதிர்ந்தன; (எஞ்சிய சில) பிதிர்ந்தன.

முரிதல் - வளைதல். மறிதல் - மடங்குதல். ஓசிதல் - துவளல்.

இப்பாட்டில், மரங்கள் பலவகைக்கேடடைந்ததைக்குறித்தற்கு எதுகைத்தொடைமலிய எடுத்தாளப்பட்டிருக்கும் தொடுப்பான சொல்லடுக்கு வியந்து பாராட்டத்தக்கது.

வீசியெறிந்தமரங்களால் விளைந்த வினோத சம்பவங்கள்.

[அனுமான் விண்ணில் வீசியெறிந்த விருக்கங்களால் தாக்கப்பட்டுத் தேவலோகத்து நந்தனவனம் சிதைவடைந்தது. அவன் கடலில் எறிந்த மரங்களுடன் சென்ற, தேன் மலர் காய் கனி வண்டு பறவைகளைக்கண்டு மேலெழுந்து உண்ட மீன்கள், அம் மரங்கள் தாக்க மடிந்தன. அம் மரங்களால் தூர்க்கப்பட்டதனால், முன், விண்வழியாக அவன் கடந்த கடல், மண்வழியாகக் கடக்கக்கூடியதாயிற்று. அவன் பிடுங்கியெறிந்த மரங்களால் இடிந்த இலங்கை மாளிகைகள், இடிவிழுந்து தகர்ந்த மலைகள்போன்றன.

அவன் விசையாக வீசிய விருக்கவருக்கம், விண்ணாட்டில் மேவிவிளங்கியது, அந்நாட்டிலும் அசோகவனமுள்ளதென்னும்படியிருந்தது. விண்ணவர், அவவினையால் மண்ணிற் பிறந்து தங்கித் தவவினையால் மீண்டும் விண்ணடைந்தாற்போலத் தேவதருக்கள்,

இராவணனால் தேவலோகத்திலிருந்து கொணர்ந்து இலங்கையில் அசோகவனத்தில் நடப்பட்டிருந்தவை, அனுமானால் மீண்டும் தேவலோகத்தை அடைந்தன. பலவகைப் பறவைகள் பயந் தொலிக்கும் ஒலியும் மரங்கள் முறிந்ததிரும் அதிர்ச்சியும் அனுமான் ஆரவாரிக்கும் ஆரவாரமும் எங்கும் பரவின.

அனுமானால் அந்தரத்தில் எறியப்பட்ட பொன்னாலும் மணியாலும் இயன்ற மரங்கள், *உற்பாதமாக இரவிலே வானத்தில் இடப்பட்ட இந்திரவில்லை ஒத்து விளங்கின†. அவன் சினந்து வீசியெறிந்த மரங்களிலிருந்த பறவைகள் கூட்டுடனே விண்ணுலகடைந்தன: அவன் கோபமே, கூட்டுடன் சுவர்க்கபதவியை அடைவிக்குமானால், அவன் கருணை, எத்துணை உயர்பதவியை எய்துவிக்குமென்று எவர்தாம் சொல்லவல்லர்.

சீதை தங்கியிருந்த மரம் ஒன்றேயொழிய, அசோகவனத்து மரம் அனைத்தும் அழிந்தது, பிரளயகாலத்தில் திருமால் உறையும் ஆலமர மொன்றேயொழிய அகில உலகமும் அழிந்ததை ஒத்தது.]

சூரியோதயவருணனை.

122. உறுசுடர்ச் சூடைக் காசுக் கரசினை உயிரொப் பானுக்
கறிகுறி யாக விட்டாள்: ஆதலால், வறியள்! அந்தோ!
செறிகுழற் சீதைக் கென்றோர் சிகாமணி தெரிந்து வாங்கி
எறிகடல், ஈவ தென்ன எழுந்தனன் இரவி யென்பான்.

இ-ள். (இலக்குமியான சீதை, மற்றைய அணிகளைக் களைந் தெறிந்தபோது, எறிந்துவிடாமல் பாதுகாத்துவைத்திருந்த) சூடாமணியை (த் தன்னை அனுமான் கண்டதற்கு) அடையாளமாக (அவனிடம் கொடுத்து) அனுப்பிவிட்டாள். ஆதலால், ஐயோ! (இப்போது ஒரு நகையுமில்லாமல்) ஏழையாயிருக்கின்றாளென்று— (இலக்குமியைப் பெற்ற) கடல் எண்ணி, (அந்த இலக்குமியான) சீதைக்கு ஒரு சிகாமணியைத் தேடியெடுத்துக் கொடுப்பதுபோன்று (கடலினின்று) சூரியன் தோன்றினான்.

---

* உற்பாதம் - துர்க்குறி.

† வார்முர சிருந்துவறி தேயதிரு மாலோ
வந்திரவில் இந்திரவில் வானிலிடு மாலோ. (கலிங்கத்துப்பரணி.)

உறுதல் - மிகுதல். சூடை - முடி. காசு - இரத்தினம் - மணி. சூடைக்காசு - முடிமணி - சூடாமணி. சூடைக்காசுக்கு அரசு - சிறந்த சூடாமணி. சூடாமணி, சூளாமணி, முடிமணி, சிரோரத்தினம், சிகாமணி என்பவை ஒருபொருள்குறித்தவை. விடுதல் - அனுப்புதல். வறியள் - வறுமையுடையவள் - வெறுமையுடையவள் - (ஓர் ஆபரணமுமில்லாத) ஏழை. இரவி - சூரியன். பாடபேதங்கள்: காசவ்வுயிரினை, காசையுயிரினுக்கு.

சிறிதுநேரத்துக்குமுன் நிகழ்ந்த, சீதை அனுமானிடம் சூடாமணிகொடுத்தவரலாற்றை மிகஇனிமையாகச் சூரியோதயவருணனைக்கு உபயோகமாக எடுத்தாண்டிருக்கும் இனிய கவிசாதுரியம் பாராட்டத்தக்கது.

அசோகவனத்தை அழித்த அனுமான்தோற்றமும் சீதையைக் காத்த அரக்கியர் ஓட்டமும்

[அசோகவனத்தை அழித்துவிட்டு வெறு வெளியில் தனியனாகநின்றஅனுமான், திரிலோகங்களையும் அளந்த திரிவிக்கிரமனையும் அமுதமதனகாலத்தில் ஆழிநடுவே நின்ற மந்தர மலையையும் உகாந்தகாலத்து உருத்திரமூர்த்தியையும் ஒத்துத் தோன்றினான். அவனுடைய விஞ்சையினால் விழிப்பொழிந்து உறக்கமுற்றுக்கிடந்த இராட்சசிகள் அசோகவனம் அழிக்கப்பட்ட அதிர்ச்சியினால் விழிப்படைந்து, எழுந்து, அவன் பெருவடிவைக் கண்டு பிரமித்து 'இந்த மாயவடிவம் யாதென அறிவாயோ?' என்று சீதையைக்கேட்க, அவள், 'மாயம்வல்ல அரக்கர் அறியாரெனின், யாரறிவார்?' என, அவர்கள் அஞ்சியோடியொளித்தனர்.

அனுமான் ஒரு செய்குன்றைப் பிடுங்கி இலங்கைமேலெறிதல்.

இராவணனது ஏவலின்படி, பிரமதேவன், வேறெவரையுங் கொண்டு செய்வியாமல், தானே நிர்மாணஞ்செய்ததும் பொன்னாலும் மணியாலும் இயன்றதுமான மிகப்பெரிய செய்குன்று ஒன்று நின்றதை அனுமான் கண்டான். கண்டவன், தான் முன் கேட்டிருந்தவாறு, இராவணன் வெள்ளிமலையை வேரோடுபிடுங்கினது இழிவுபடும்படி மேருகிரியைப் பேர்ப்பான்போல, அச் செய்குன்றைப் பிடுங்கி இலங்கைமீது எறிந்தான்.

அசோகவனம் அழிந்ததைக் காவற்றேவர் இராவணனுக்குத் தெரிவித்தல்.

அவ்வப் பருவங்களிற் காணப்படும் அழகிய மலர்களும் இனிய கனிகளும் எல்லாப்பருவங்களிலும் காணப்படுமாறு இராவண னேவலின்படிசெய்துகொண்டு அசோகவனத்தைக் காத்துக் கொண்டிருந்த, ஆறுபருவங்களுக்கும் அதிதேவதைகளான பருவத் தேவர்கள், பீதியாகிய பெருநெருப்பிட்ட உள்ளத்தினராய், அப் பீதியினுல் சிறுநீரிட்ட உடையினராய், அனுமான் எறிந்த மரக் கிளைகளால் பீறிட்ட உடலினராய், ஒன்றேடொன்று பின்னித் தள்ளாடிய காலினராய், ஊளையிட்ட வாயினராய், ஓடி, இராவணனை அடைந்து, காலில் விழுந்து 'மலைபோலும் தோளுடைய வானர மொன்று, அசோகவனத்தைக் கையாலும் காலாலும் துகைத் தழித்துச் செய்குன்றைப் பிடுங்கியெறிந்து இலங்கைநகரம் பெரும்பாகம் அழியும்படிசெய்திட்டது' என்றார்கள்.

தேவர்கூறியதை யாவர்நம்புவாரென்று இராவணன் சிரிக்கும்போது எல்லாரும் நம்பும்படி அனுமான் ஆரவாரித்தல்.

அந்தக் காவற்றேவரைநோக்கி, இராவணன், 'தனிப்பட்ட ஒருகுரங்கு நீங்கள் காத்த அசோகவனம் அனைத்தையும் அழித்த தன்றி, அரக்கர்காக்கும் பெருத்த செய்குன்றைப் பிடுங்கியெறிந்து இலங்கையையே சிதைத்தது! என்றீர்கள். இது ஆச்சரியம்! இப் படிப்பட்ட பேச்சை மூடரும் மொழியார். இதை யார் நம்புவார்' என்று பெருநகைசெய்யத் தேவர்கள் 'அந்த வானரனை மூவரில் ஒருவனென்னலாம். அவன் வலிமையை நீ இப்போதே காண்பாய்' என்றனர். அப்போது, பூமி பிளக்கவும் எட்டுத் திக்குங் காக்கும் தேவர்களும் திசையானைகளும் நிலைகெட்டோடவும், அஞ்சாத அரக்கக்கருப்பிணிகள் அஞ்சிக் கருப்பங்கலங்கவும், அண்டமே விண்டதோவென்று அயிர்ப்புண்டாகவும் அனுமான் ஆரவாரித் தான்.

பொழிலிறுத்தபடலம் முற்றிற்று.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

ஸ்ரீ:

மதிப்புரை.

நான் கண்டதும் கேட்டதும்:—இப்பெயர்கொண்ட புத்தகம், ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களால் எழுதப்பெற்றது; இனிய வசனநடையில் இயன்றுள்ளது.

ஆசிரியரவர்கள் தம் வாழ்நாளில் அவ்வப்போது நேரிற்கண்டும் கேட்டும் அறிந்த உண்மைச்செய்திகளைப் பிறரும் பயின்று பயன்கோடல் நன்று என்னும் பெருங்கருணைமேலீட்டால் மெய்யன்பர் பலர் வேண்டுகோட்கிணங்கி இதனை இயற்றியிருப்பதாகத் தெரிகின்றது. இம் முறையே இன்னும் பல அரிய கட்டுரைத் தொகுதிகள் வெளிவருவன உளவாம்.

எத்துணையோபல அருந்தமி ழிலக்கண இலக்கிய நூல்கள் பரிசோதித்தும் உரைவகுத்தும் உலகுக்களித்த தமிழ்ப்பெருங் கிழமைத் தனித்தகைவள்ளலாகிய ஐயரவர்கள், தம் உபகாரத்திலும் குறையுளதுபோலக்கருதி, இளைஞர் முதியர் பெண்டிர் பேதை என்றித்திறத்த மக்கள் எனைவரும் இன்பந்துய்க்கப் பல்வேறுசுவைதழுவி, இக்காலம் எழுதிவரும் உரைநடைநூல்களிலே அவர்களுடைய பரோபகாரவாழ்க்கையின் சாரமானபகுதி பொதிந்துள்ளது என்னலாம். நிற்க.

இப்புத்தகம் தமிழ்க்கல்வியின் இளமாணவரெவரும் பிழையற எழுதவும் பேசவும் பயிலுதற்கு மிகவும் விரும்பி வாசித்தற்குரியதாம். இதன் விலை அணா 6. வேண்டுவோர் "தியாகராஜ விலாசம், பிள்ளையார்கோவில் தெரு, திருவேட்டீசுவரன்பேட்டை, திருவல்லிக்கேணி. P. O. சென்னை" என்ற விலாசத்தில் ஐயரவர்களிடம் பெறலாம்.

தஞ்சைவாணன்கோவை (மூலமும் உரையும்):—தஞ்சைவாணன்கோவைக்குக் குன்றத்தூர் அட்டாவதானி சொக்கப்பநாவலருரையுண்மை கற்றூர் பலரும் நன்கறிந்தது. நெடுநாண்முன்னரே அஃது அச்சேறியதெனினும், அப்புத்தகம் விலைக்குக்கிடைப்பது அரிதாயிற்று. ஆகலின் அவ்வுரையினைச் செவ்வனம் பரிசோதித்து இஞ்ஞான்று யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரால் இப்புதுப் பதிப்பு வெளியிடப்பெற்றுள்ளது. இதன் பதிப்பாசிரியர் இருமொழிப்புலமையும்வாய்ந்த வித்துவான் திரு. ந. சுப்பையபிள்ளையவர்களாவர். அன்னார்தம் நுணுகிய ஆராய்ச்சித்திறமையால் இப்பதிப்பு அடைந்துள்ள சீர்திருத்தங்கள் மிகப்பல. தொல்காப்பியப்பொருளதிகாரம் இறையனார்களவியல் அகப்பொருள்விளக்கம் முதலியவற்று உரையிற்காணும் பொருண்முடிபுகளின் ஒற்றுமை வேற்றுமைகளும், உள்ளுறையுவமம் இறைச்சிப்பொருள் என்பவற்றிலக்கணவேறுபாடும் இதில் நன்கு விளக்கப்பெற்றுள்ளன. அன்றியும், இதில் சொக்கப்பநாவலருரையிற்கண்ட பிறநூன் மேற்கோட்பகுதிகளுக்கெல்லாம் தெளிவான பொருள் வரையப்பட்டுள்ளது. மற்றும் அவ்வுரையாளர்கொள்கையான இலக்கண இலக்கிய வழக்காறுகட்குப் பற்பல நூற்சான்றுகாட்டி நிறுவியும், அவற்றுட்சிலவற்றிற்கு விகற்பவகை முடிபுகாட்டியும் இனிது செல்லுகின்ற அடிக்குறிப்புக்கள் இப்பதிப்பிற் பக்கந்தோறும் மிளிர்கின்றன. அவை யாவும் பரீக்ஷாபாடமாக இந்நூலுரையினைப் பயிலும் நன்மாணாக்கர்க்குப் பேருதவிபுரியுமென்பதில் ஐயமில்லை. இங்ஙனமே இந்நூற்பரிசோதகர்யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலரவர்களேபோலத் தமிழ்த்தொண்டாற்றிப் புகழ்படைக்குமாறும், சைவபரிபாலன சபையார் பல நூற்பதிப்புவாயிலாக உலகுக்குதவுமாறும் இறைவன் அருள்புரியவேண்டும். நிற்க.

இத்தஞ்சைவாணன்கோவையுரைப்புத்தகம் ஆன்றோரெழுதிய முன்னுரை, தமிழ்ப்புலவரளித்த சிறப்புப்பாயிரம், பதிப்பாசிரியர் முகவுரை, நூலாசிரியருரையாசிரியர் வரலாறு, உரையின் விஷயசூசிகை, கோவைச்செய்யுண்முதற்குறிப்பகராதி முதலிய

பகுதிகள் நிரம்பி, ஏறத்தாழ நானூறுபக்கங்கொண்டு, நேர்த்தியான காகிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களில் உறுதியான பைண்டுடன் கண்ணைக்கவரும்வண்ணம் விளங்குகின்றது. இதன் விலை முதலிய விவரம், "மானேஜர் 'இந்துசாதன' ஆபீஸ், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற் றெரிந்துகொள்க.

தாத்ருவருஷ திருக்கணித பஞ்சாங்கம்:-இது, சென்னை 'ஜ்யோதிர் பூஷணம்' பிரமஸ்ரீ T. S. விசுவநாதசிரௌதிகள் B.A. அவர்கள் பார்வையில் அவர்களுடைய சிஷ்யர் யாழ்ப்பாணம் மட்டுவில் ஸ்ரீ. சி. சுப்பிரமணிய ஐயரவர்களால் கணிக்கப்பட்டது. வாக்கியகணிதம் திருக்கணிதம் என்ற இரண்டிற் பின்னையது இக்காலத்திற்கு மிகவும் ஏற்றதென்று போற்றப்படுவதுண்டு. அம்முறையில் இப்பஞ்சாங்கம் பலரும் விரும்பத்தக்கதே. கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளும் இக்கணனவிஷயமாய் யோக்யதாபத்திரிகை அநுக்கிரஹித்திருப்பதாகத் தெரிகிறது. சோதிடமறிவார்க்கு மிக்க துணையாகும் நூற்றுக்கு மேற்பட்ட அரியவிஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. பொதுவாகப் பஞ்சாங்கம் என்ற பெயரால் வழங்கும் எல்லாவற்றினும் இது மிகச் சீரியதென்றே சொல்லலாம். இதன் விலை சதம் 25. வேண்டுவோர் "சி. சுப்பிரமணியஐயர், 'தில்லைவாஸம்' மட்டுவில், சாவகச்சேரி. (இலங்கை)" என்ற விலாசத்திற் பெறலாம்.

சீதாகல்யாணம்:- இப்பெயர்கொண்டபுத்தகம், திருச்சி ஸ்ரீ. பார்த்தஸகன் அவர்களால் சிறுவர் சிறுமியரும் விரும்புமாறு எளிய இனிய தமிழ்நடையிற் கம்பராமாயணச் செய்யுட்பொருளைத்தழுவி எழுதப்பெற்றது. 'படிகொண்ட சீர்த்தி யிராமாயணமென்னும் பத்தி வெள்ள'த்தில் யாவரும் எளிதில் திளைக்குமாறுசெய்யும் இது போன்ற முயற்சிகள் எவையும் வேண்டற்பாலனவேயாம். இப்புத்தகத்தின் விலை அணு 4. வேண்டுவோர், "எ. ஆர். ராஜகோபாலன் அவர்கள், மானேஜர், ஸ்ரீராமபிரசுராலயம், ஸ்ரீரங்கம்" என்ற விலாஸத்திற் பெறலாம்.

௨

சடையவர்மன் குலசேகரபாண்டியன்.

இவ்வரசனுடையகாலம் கி.பி. 1161-முதல் கி.பி. 1180-வரை என்று திருவாளர் சதாசிவபண்டாரத்தாரவர்கள் செந்தமிழ் 32-ஆம் தொகுதியின் ௩௪௯—௩௫௦-ஆம் பக்கங்களிற் கூறியுள்ளார்கள்.

இவ்வரசன்காலத்திற் பாண்டிநாடானது இருபகுதியாகப் பிரிக்கப்பட்டு, இவ்வரசன் தேன்காசியை இராசதானியாகக் கொண்டு தென்பாண்டியையும், இவனுடைய ஞாதி பராக்கிரம பாண்டியன் மதுரையை (=கூடலை) இராசதானியாகக்கொண்டு வட பாண்டியையும் அரசாண்டார்கள்.

இவர்களுடையகாலத்தைக்குறிப்பதில், இவர்கள்காலத்தில் இருந்த சோழ அரசர்களுடைய காலத்தையும் கவனித்து, காலத்தை நிச்சயித்தல் நலம். ஏனென்றால், சோழ அரசர்களுடைய காலங்கள் பல கல்வெட்டுக்களால் நிறுவப்பட்டிருக்கின்றன.

இவர்கள்காலத்தில் அரசாண்ட சோழர்களைப்பற்றி விசாரிப்போம்:—

கி.பி.	1120-முதல்	கி.பி.	1136-வரை		விக்கிரமன்
,,	1136	,,	1146	,,	குலோத்துங்கன் II
,,	1146	,,	1162*	,,	இராசராசன் II
,,	1166	,,	1178	,,	இராஜாதிராசன் II

கி.பி. 1178-முதல் கி.பி. 1216-வரை மூன்றாங்குலோத்துங்கன் அரசாண்டான்.

---

* கி. பி. 1162-முதல் கி. பி. 1166-வரை இராசராசனுடைய சேனாதிபதியாகிய, ஜயங்கொண்டசோழமண்டலத்து, ஆமூர்க்கோட்டத்துச் சிறுகுன்றநாட்டுக் காரிகைக் குளத்தூர்மன், திருச்சிற்றம்பலமுடையபெருமான் நம்பியான பல்லவராயன் இரண்டாம் ராசராசனுடையமகன் மூன்றாங் குலோத்துங்கனுக்காக அரசாண்டான்.

மேலே சொன்ன அரசர்களெல்லாம் பாண்டியர்களை வென்று, கப்பங்கட்டும்படி செய்திருக்கிறார்களென்பது அவர்களுடைய மெய்க்கீர்த்திகளால் விளங்குகிறது. அவை வருமாறு:—

* * * *

கோயிற் கொற்ற வாயிற் புறத்து
மணிநா வொடுங்க முரசுகள் முழங்க
விசயமும் புகழும் மேன்மே லோங்கச்
செழியர்வேந் சுரம்புகச் சேரர் கடற்புக
அழிதரு சிங்கள ரஞ்சிநெஞ் சலமரக்
கங்கர் திறையிடக் கன்னடர் வென்னிடக்
கொங்கர் ஒதுங்கக் கொங்கணர் சாயமற்
றெத்திசை மன்னரும் தத்தமக் கரணெனத்
திருமலர்ச் சேவடி உரிமையி லிறைஞ்சச்
செம்பொன் வீர சிங்கா சனத்துத்
திரிபுவன முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய
கோப்பரகேசரிவன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள்
விக்கிரமசோழதேவர்க்கு யாண்டு.

* * * *

இரண்டாங்குலோத்துங்கன் மெய்க்கீர்த்தி.

* * * *

இறையெனப் படுத லின்றி நின்றபெருஞ்
செல்வமோ டவனி வாழப் பல்லவர்
தெலுங்கர் மாளுவர் கலிங்கர் கோசலர்
கன்னடர் கடாரர் தென்னர் சேரலர்
சிங்களர் கொங்கணர் சேதியர் திரிகர்த்தர்
வங்கர் அங்கர் வத்தவர் மத்திரர்
கங்கர் சோனகர் கைகயர் சீனர்என்
றறைகழல் வேந்தரு மெல்லா அரசரும்
முறைமையில் வருந்தித் திறைகொணர்ந் திறைஞ்ச

* * * *

இராசகேசரிவன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள்
குலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு.

இரண்டாம் இராசராசனுடைய மெய்க்கீர்த்தி.

*   *   *   *

கன்னடரும் காலிங்கரும் தென்னவரும் சிங்களரும்
கைகயரும் கொங்கணரும் கூபகரும் காசிகரும்
காம்போதரும் கோசலரும் கொந்தளரும் கம்பளரும்
பப்பளரும் பாஞ்சாலரும் பொப்பளரும் பூலுவரும்
மத்திரரும் மாராட்டரும் வத்தவரும் மாகதரும்
கொடிநுடங்கு கனககோபுரக் கொற்றவாசலில் வந்தீண்டிச்

*   *   *   *

செம்பொன் வீரசிம்மாதனத்துப்
புவனமுழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய
கோப்பரகேசரிவன்மரான திரிபுவனச்சக்கிரவர்த்திகள்
இராசராசதேவர்க்கு யாண்டு.

*   *   *   *

ஆகையால், பாண்டிய அரசர்களாகிய முதலாம் சடையவர்மன் குலசேகரபாண்டியனும், இவனுடைய ஞாதி பராக்கிரமபாண்டியன் @ வரகுணபாண்டியன் IV @ கருணாகரபாண்டியனும்) சோழர்களுக்குக் கப்பங்கட்டும் அரசர்களாயிருந்தார்கள் என்று அறிகிறோம்.

அப்படியிருந்தும், சடையவர்மன் குலசேகரபாண்டியனும் பராக்கிரமபாண்டியனும் விரோதித்துக்கொண்டு, ஒற்றுமையின்றி, ஒருவர்நாட்டை மற்றொருவர் கவர்ந்துகொள்ளச் சமயம்பார்த்துக் கொண்டிருந்தார்களென்று ஏற்படுகிறது.

பராக்கிரமபாண்டியன் என்பவன் புலவனும் புலவர்களை ஆதரிப்பவனுமாயிருந்ததோடு, சிவபத்தி அடியார்பத்தியும் உடையவனாயிருந்தவன். நல்ல குணவான். கபடம் அற்றவன்.

சடையவர்மன் குலசேகரபாண்டியனே இவனுக்கு மாறான குணமுடையவன்.

பராக்கிரமபாண்டியனுடைய அவைக்களத்தில் புகழேந்திப் புலவர் திகழ்ந்தனர். இதனை,—

"எண்ணீர்மை நூலுக் ககத்திய னுமிவன் என்பதெல்லாம்
வெண்ணீர்மை யன்றி விரகல்ல விக்ரம மாறன் செஞ்சொற்
பண்ணீர்மை தேரும் பராக்ரம மாறன் பதங்கழுவும்
தண்ணீர் குடித்தல்ல வோகும்ப யோனி தமிழ்கற்றதே"

(தமிழ்நாவலர்சரிதை.)

என்னும் பாட்டால் அறியலாம்.

புகழேந்தியாருடைய சொந்தவூர் செங்கற்பட்டுஜில்லாவி லுள்ள பொன்விளைந்தகளத்தூர் என்ப. இவர் அவ்வூரிற் படித்துப் புலவரானபிறகு, செஞ்சிநகரில் அரசாண்ட "கொற்றந்தை" என்னும் பெயருடைய காடவர்கோன் (=பல்லவ அரசன்) பேரில், "செஞ்சிக்கலம்பகம்" என்ற பிரபந்தம் ஒன்றைப் பாடிக்கொண்டு போய்ப் பரிசுபெற்றுவந்தார். பிறகு சிலநாட்கழித்து மதுரையில் அரசாளும் பராக்கிரமபாண்டியன் புலவன் என்றும், புலவர்களை ஆதரிப்பவன் என்றும் அறிந்து, மதுரைசென்று, பராக்கிரம பாண்டியனை மகிழ்வித்து, அவனுடைய அவைக்களப்புலவராய்த் திகழ்ந்தனர். அப்போது புகழேந்திக்கு 30-வயதுக்குக் குறையாது.

இப்படியிருக்கும்போது, சடையவர்மன் குலசேகரபாண்டியன் இரகசியமாய்ச் சேனைகளைச் சேர்த்துப் பராக்கிரமபாண்டியனைத் தாக்க எண்ண, அந்தச் சங்கதியை ஒற்றர்கள்மூலமாய் அறிந்த பராக்கிரமபாண்டியன், தானும் போருக்கு ஆயத்தம்செய்து, சிங்கள அரசனையும் தனக்கு உதவிசெய்யும்படி கேட்கத் தன் அவைக் களத் தலைமைப்புலவராகிய புகழேந்தியாரை இலங்கைக்குத் தூது போக்கினன்.

இலங்கையில் அப்போது அரசாண்டவன் மூன்றும்பராக்கிரம பாகு என்பர். பராக்கிரமபாகுவின் யுத்தமந்திரி (=War Minister.) ஆரியசேகரன், ஆரியச்சக்கரவர்த்தி என்பவர்.

புகழேந்தியார், புலமைநிரம்பியவராயிருந்ததோடு, அரசாங்க விஷயங்களிலும் (Politics) மதிநுட்பம்வாய்ந்தவர் என்று இதனால் விளங்குகிறது.

பராக்கிரமபாகுவும் அவர் மந்திரி ஆரியசேகரனும், புகழேந்தியாரை மகிழ்வுடன் வரவேற்று விடயங்களையெல்லாங்கேட்டுப் பணஉதவியும் படையுதவியும் செய்வதாக ஒப்புக்கொண்டனர்.

அதன்பின் புகழேந்தியார் கதிர்காமம் சென்று முருகக் கடவுளைத் தரிசித்து அருள்பெற்று மீண்டார். மீண்டுவரும்போது, கதிர்காமக் காட்டில் உள்ள மயில் ஒன்று ஒரு பாம்பைப் பிடித்துக் கொல்லப்போகுந்தருணத்தில், புகழேந்தியார் அதனைப் பார்த்து, இரக்கங்கொண்டு,—

"தாயரவை முன்வருத்துஞ் சந்த்ரோத யந்தனக்குன்
வாயரவை விட்டுவிட மாட்டாயோ—தீயரவை
சீறு மயிற்பெருமாள் தென்கதிர்கா மப்பெருமாள்
ஏறு மயிற்பெருமா ளே"

என்ற பாடலைக் கூறவே, மயில் பாம்பை விட்டுவிட்டு ஓடிவிட்டது.

இதனால், இவர் எல்லாவுயிர்களிடத்தும் மிக இரக்கங்கொண்ட நன்னடைவாய்ந்தவர் என்பதும் தெய்வீகப்புலவர் என்பதும் பெற்றாம்.

பிறகு, இவர் இலங்கையினின்றும் யானைப்படை, குதிரைப் படைகளுடன், யானைமேல் பொன் ஏற்றிக்கொண்டு, மதுரைவந்து சேர்ந்தார். புகழேந்தியார்வரவுகேட்டுப் பராக்கிரமபாண்டியன் அவருடையவாயிலில் வந்துசேர்ந்தான். அப்போது புகழேந்தியார் சிங்கள அரசனையும் ஆரியசேகரனையும் நினைந்து,—

"பாவலன் வாசலில் வந்திபம் வாங்கப் படிபுரக்கும்
காவலர் நிற்கும் படிவைத்த வாகண்டி ஒன்பதினும்
மேவலர் மார்பினும் திண்டோ ளினுஞ்செம்பொன் மேருவினும்
சேவெழு தும்பெரு மாள்சிங்கை யாரிய சேகரனே"

என்ற பாடலைப்பாடினார்.

இதனைக்கண்ட சடையவர்மன் குலசேகரபாண்டியன் அடங்கி விட்டான். இலங்கைப்படையும் சிறுகச்சிறுக இலங்கை சென்று சேர்ந்தது. நாடு அமைவுற்றிருந்தது. இந்தக்காலத்திற்றான் பராக்கிரமபாண்டியனுடையமகளுக்குப் புகழேந்தியார் தமிழ்க் கல்விகற்பித்தது.

இப்படியிருக்கும்போது விக்கிரமசோழன் கி. பி. 1136-ல் இறக்கவே, இரண்டாங்குலோத்துங்கன் பட்டத்துக்குவந்தான்.

பராக்கிரமபாண்டியனுடைய நான்காம்ஆண்டுக் கல்வெட்டு ஒன்று ஆடுதுறையிற் காணப்படுகிறது. ஆகையால், இவன் விக்கிரமசோழன்காலத்திலேயே சோழநாட்டுக்குவந்து சடையவர்மன் குலசேகரனுடைய உள்நாட்டுக் கலகத்தைக்குறித்துப் பேசிவிட்டு விக்கிரமசோழனுடைய உதவியைப்பெற்றுப்போகும் அமயம் ஆடுதுறைசென்றிருக்கலாம் என்று ஊகித்தற் கிடம் உண்டு.

விக்கிரமசோழன் இறக்குந்தருணத்தில் தன்னுடைய சமஸ்தானவித்துவானாகிய ஒட்டக்கூத்தரிடம் தன்மகனை ஒப்புவித்து, அவனுக்குப் பட்டமுங் கட்டிக் கல்யாணமும் செய்துவைக்கும்படி சொல்லிவிட்டு இறந்துபோனான்.

கி. பி. 1136-ல் ஒட்டக்கூத்தர் இரண்டாங்குலோத்துங்கனுக்கு முடிசூட்டிவிட்டுக் கலியாணத்துக்கு ஏற்பாடுகளைச்செய்தார்.

குமாரகுலோத்துங்கனாகிய இரண்டாங்குலோத்துங்கன் ஒட்டக்கூத்தாாற் சிறுவயதிலிருந்தே பயிற்றுவிக்கப்பட்ட ஒரு பெரும் புலவன். ஆகையால், இவனுக்கு ஏற்றபெண் புகழேந்தியாராற் பயிற்றுவிக்கப்பட்ட பாண்டியன்மகளே என்று கண்டு, ஒட்டக்கூத்தர் மதுரைசென்று பெண்பேசினார். பேசும்போது ஒட்டக்கூத்தர் சொல்லுவதற்கெல்லாம் புகழேந்தியார் எதிர்பேசிவந்தார். ஒட்டக்கூத்தருக்கு அதனால் அளவிலாக்கோபம் உண்டாயிற்று. பராக்கிரமபாண்டியனும் இருபுலவர்களுடைய சொல்லாடல்களை மௌனமாயிருந்து கேட்டுக் களிப்புற்றான்.

பிறகு ஊழ்கூட்டுவிக்கப் பாண்டியன்மகளுக்கும் இரண்டாங்குலோத்துங்கனுக்கும் திருமணம் மதுரையில் நடந்தது. குமாரகுலோத்துங்கன் திருமணத்துக்கு மதுரைக்குவந்திருந்தபொழுது இராச்சியத்தை ஒட்டக்கூத்தரிடம் ஒப்புவித்து இராசப்பிரதிநிதியாக அரசாளும்படி செய்திருந்தான்.

மணம் முடிந்து உறையூருக்குத் திரும்பும்போது பராக்கிரம பாண்டியன், தன் மகளுடன் புகழேந்தியாரையும் அனுப்பினன். இவர்கள் உறையூர் சேர்ந்ததும் ஒட்டக்கூத்தர் பழம்பகையெனக் கருதித் தம்மிடத்தில் அரசாட்சி இருந்ததாற் புகழேந்தியாரைச் சிறையிலிட்டுவிட்டுப் பிறகு அரசாட்சியைக் குலோத்துங்கனிடம் ஒப்புவித்தார்.

ஒட்டக்கூத்தனுடைய போதனையால் குலோத்துங்கன் பராக்கிரமபாண்டியனுக்கு உதவிசெய்ய மறுத்துவிட்டான்.

இது சங்கதியைத்தெரிந்த சடையவர்மன் குலசேகரன் இது தான் சமயமென்று பராக்கிரமனோடு போர்தொடங்கினன்.

பராக்கிரமபாண்டியனுக்குப் புகழேந்தியாரும் பக்கத்தில் இல்லை. மருமகனாகிய சோழனும் உதவிசெய்யமறுத்துவிட்டான். இலங்கைநாட்டு மந்திரியாகிய ஆரியசேகரனும் கி.பி. 1136க்கு முந்தி இறந்துவிட்டான். ஆகையால், இன்னதுசெய்வதென்று தெரியாமல் இலங்கைக்கு ஒரு தூதுவனை அனுப்பினன்.

அதற்குள் குலசேகரபாண்டியன் சண்டையில் பராக்கிரம பாண்டியனையும் அவன் மனைவியையும் வீரபாண்டியனைத்தவிர மற்ற மக்களையும் கொன்றுவிட்டான். வீரபாண்டியன் ஓடி ஒளிந்து கொண்டான்.

இலங்கையரசன் பராக்கிரமபாகு தன்னுடைய சேனதிபதி யின்கீழ் ஒரு பெரும்படையை அனுப்பினன், அப்படை வந்து, பாண்டிநாட்டின் நிலையைத் தெரிந்து, வஞ்சனையால் பராக்கிரம பாண்டியனையும் அவன் குடும்பத்தையும் கொன்ற குலசேகர பாண்டியனோடு சண்டையிட்டு நாட்டை மீட்டது. இதற்குள் இலங்கையிலிருந்து மீண்டும் ஜகத்விஜயதண்டநாயகன்கீழ் ஒரு உதவிப்படை வந்துசேர்ந்தது.

இலங்கைப்படையின் உதவியினல் பராக்கிரமபாண்டியன் மகனாகிய வீரபாண்டியன் III முடிசூட்டிக்கொண்டு அரசாளத் தொடங்கினன். பாண்டிநாட்டில் இக்கலகம் நடந்துகொண்டிருக் கும்போது இரண்டாங்குலோத்துங்கன் கி. பி. 1146-ல் இறந்து விட்டான். 1162-ல் இரண்டாம் இராசராசனும் இறந்துவிட்டான்.

ஆகையால், குலசேகரபாண்டியன் சோழநாடுபுக்கு அப்போது அரசாட்சிசெய்துகொண்டிருந்த இரண்டாம் இராசாதிராசனைச் சரண்புகுந்து உதவிசெய்யுமாறு வேண்டினன்.

இரண்டாம் இராசாதிராசன் கி. பி. 1166 முதல் கி. பி. 1178 வரையில் அரசாண்டவன்.

இரண்டாம் இராசாதிராசன் திருச்சிற்றம்பலமுடைய பெருமான்நம்பி பல்லவராயன்கீழ் ஒரு படையைக் குலசேகரனுக்கு உதவியாக அனுப்பினன்.

சோழர்படை சென்று இலங்கைப்படையை விரட்டிவிட்டு, வீரபாண்டியனையும் ஜெயித்து குலசேகரபாண்டியனை மறுபடியும் சிம்மாசனத்தில் வைத்துவிட்டுத் திரும்பியது.

ஆகையால், பராக்கிரமபாண்டியனுடைய ஆட்சி மதுரையில் கி. பி. 1120லேயே ஆரம்பித்திருக்கவேண்டுமென்றும், அப்பொழுதே சடையவர்மன் குலசேகரபாண்டியனுடைய ஆட்சியும் தொடங்கியிருக்கவேண்டுமென்றும், புகழேந்தியார் கி. பி. 1090 முதல் கி. பி. 1156 வரை வாழ்ந்த பெரும்புலவர் என்றும், இவர் இலங்கைக்குத் தூதாகச்சென்றது கி. பி. 1124ஆக இருக்கவேண்டும் என்றும், பராக்கிரமபாண்டியனுடைய மகளுக்கும் இரண்டாங் குலோத்துங்கனுக்கும் நடந்த கல்யாணம் கி. பி. 1136ல் என்றும், குலசேகரபாண்டியன் பராக்கிரமபாண்டியனைக் கொன்றது கி. பி. 1140ல் என்றும், ஏனென்ருல், புகழேந்தியார் சோழனைவிட்டு முரணைநகருக்கு கி. பி. 1142ல் சென்றபோது மதுரையில் பராக்கிரமபாண்டியன் இல்லையென்றும், பராக்கிரமபாண்டியன்மகன் வீரபாண்டியன் III, கி.பி. 1140 முதல் கி.பி. 1170 வரை அரசாண்டான் என்றும், கி. பி. 1170ல் இரண்டாம் இராசாதிராசன் குலசேகரபாண்டியனை மறுபடிபட்டத்தில்வைத்தானென்றும் அறியலாம்.

ஆகவே, குலசேகரபாண்டியன் முதன்முதல் தென்பாண்டியில் ஆள ஆரம்பித்தது கி. பி. 1120ஆக இருக்கலாம் என்று எண்ணுகிறேன்.

துடிசைகிழார். அ. சிதம்பரனார்.

பிறர் விலக்குவித்தல்.

240. விடைக்குன் றுகைத்தவர் தென்கயி லாயர்தம் மெய்யருளாற்
படைக்குந் தொறுமய னென்னையு மென்னன் பரையுமின்பம்
கிடைக்கும் படிக்குப் படைத்திடப் பெற்றனன் கேடில்வரம்
தொடைக்குன் றனமுலை வந்தெவன் போயெவன் றூதுகளே.

குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல்.

241. தண்ணார் கயத்திற் றழுவி யெடுத்துத் தகவில்சிறு
கண்ணார் கயத்தைக் கடிந்தநம் மன்பர் கடிவரவைப்
பெண்ணார் தருமிடப் பாலர் சிராமலைப் பேரமுதாம்
பண்ணார்மொழிநங்குரவோரெதிர்கொளும்பான்மைசெய்யே.

கசூ. வரைவுகடாதல்.

வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்.

242. மன்று ணடம்புரி யெம்மான் சிராமலை வாழ்த்துமன்பா
துன்று மலர்க்குழ லன்னைமின் ஞாளயிச் சூழ்பொழில்வாய்
நின்று வருந்துவ தேதென மாதரை நேடியிவண்
என்று மெனக்கரு ளன்பனை யானெய்த வென்றனளே. (க)

---

240. அயன்படைத்திட வரத்தைப் பெற்றனன். தூதுகள் வந்தெவன் போயெவன்; பயனில்லையென்றபடி.

241. கயத்தில் - நீர்நிலையில். கயத்தை - யானையை. புனறருபுணர்ச்சியையும் களிறுதருபுணர்ச்சியையும் குறிப்பித்தபடி. கடிவரவு - மணஞ்செய்துகொள்ளுதற்குவருதல். வரவை எதிர்கொள்ளுமாறு செய்.

242. என - என்று செவிலி கேட்க. மாதரை - ஆயமகளிரை. என்றும் எனக்கு அருள் அன்னையே. மாதரை நேடி யான் அன்பு எய்தநின்று வருந்தினேனென ஒருசொல் வருவிக்க. தோழியைத் தேடி அவள் வாயிலாக என்றும் எனக்கு அருள்புரியும் தலைவனையடைவதற்கென்பது வேறொருபொருள்; அன்பனை - தலைவனை.

அலர் அறிவுறுத்தல்.

243. அடியா ருளத்தென்று மாடுஞ் சிராமலை யண்ணலருட்
கடியார் கழன்மலர் போற்றுமன் பால்வளர் காவன்மன்னு
துடியா ரிடைவஞ்சி யோர்கொழு கொம்பெனச் சூழ்ந்துபடா
கொடியார் தரவலர் பூத்தன வான்மணங் கொண்டருளே. (உ)

தாய் அறிவுறுத்தல்.

244. ஆட்டமு நாட்டமு மூன்றேன் சிராமலை யார்மடமான்
தேட்டமு நாட்டமுந் தேமலர்க் கூந்தற் செறிமணத்தின்
ஈட்டமும் வேட்டமும் பூண்முலைத் தேமலு மேயுமனக்
கோட்டமும் வாட்டமுங் கண்டா யுயிர்த்தனள் கொற்றவனே.

வெறி அச்சுறுத்தல்.

245. பொன்னை மருவு நிறத்தாற் கரியதன் பூங்கழறந்
தென்னை யெனக்கரு ளெம்மான் சிராமலை யேத்துமன்னு
மின்னை நிகரிடை மான்பொருட் டாக வெறியயர்ந்தே
அன்னைநின் னுறும் வெங்நோ யகற்ற வடுமையையே. (ச)

பிறர் வரைவுணர்த்தல்.

246. வாரித் திரைவளை முத்தங் கொழித்திடும் வண்டுறைவா
காரிற் றிகழ்மணி கண்டர் சிராமலைக் காரிகையின்
பூரித் தெழுமணிப் பூண்முலை வேட்டுப் புரவலர்கள்
பாரித் தனர்நிதி வேண்டுவ நீயெவன் பாணிப்பதே. (ரு)

---

243. கொடியார் - கொடிபோன்றவர், கொடுமையையுடையார்; அலர் - மலர், பழிமொழி; மணம் - நறுமணம், கலியாணம்; சிலேடை; "மணமேபின் னும்பெறத் தானல ரேமுன் வரப்பெற்றதே" குலோத்துங்க சோழன் கோவை, 419.

244. ஆட்டம் மூன்றுவன: கொடுகொட்டி, பாண்டரங்கம், காபால மென்பன; கலித்தொகைக் கடவுள் வணக்கத்தைப் பார்க்க. தேட்டம் - தேடுதல். வேட்டம் - விருப்பம். கண்டு ஆய் உயிர்த்தனள்; ஆய் - தாய்.

245. பொன் - திருமகள். நிறத்தான் - திருமால்; நிறம் - மார்பு. மையை அடும் - ஆட்டைக் கொல்வாள்.

246. வேண்டுவனவாகிய நிதியைப் பாரித்தனர்; பாரித்தல் - மிகச் சொரிதல். எவன் பாணிப்பது - தாமதிப்பதற்குக் காரணம் யாது?

வரைவெதிர்வுணர்த்தல்.

247. சாந்த மணிமுலை பாகன் சிராமலை தானிகராம்
வேந்த விவனெம் பிராட்டியை நீமணம் வேட்டுவந்தாற்
பாந்த மொடுமெமர் வந்தெதிர் கொண்டு பரிவுசெய்வார்
காந்த மெதிர்வச மாகு மயமெனக் காதலுற்றே. (சு)

வரையுநாள் உணர்த்தல்.

248. பணிகொண்ட வார்சடை யெம்மான் சிராமலைப்பைந்தொடியாள்
மணிகொண்ட வார்முலைபொன்பூத் தெனமணம் வாய்ப்பமன்ன
கணிகொண்டவேங்கைகள்பூத்தன வான்கதிர் காட்டியெங்கும்
அணிகொண்ட தண்பரி வேடத்துட் டோன்றிய தம்புலியே.

தலைமகள் அறிவுறுத்தல்.

249. தனத்தார் பசப்பும் வளைகலை சோர்வதுந் தாயயலார்
இனத்தா ரொடுமெனைச் சேர்த்து மறைத்தன ளீங்கெளியேன்
சினத்தா ரெனவுன் பழிமொழிவேனெனத் தேர்ந்துகொல்லோ
வனத்தா ரிதழிச் சடையார் சிராமலை மன்னமின்னே. (அ)

குறிபெயர்த்திடுதல்.

250. தண்ணார் மதிமுடி யெம்மான் சிராமலைத் தார்ப்புயத்தாய்
நண்ணா ரெனநம ரிம்மா தவிநிழ னண்ணுவரால்
விண்ணா ருறவள ரம்மா தவிப்பொழில் வெற்பதொன்றிற்
கண்ணார் மணியெனு மெம்மானை மேவிக் களித்தருளே. (கூ)

---

247. பாந்தம் - பொருத்தம்; "பாந்தமதாயெற்கருள்வோன்" (சிராமலைக்கோவை, 105); "பாந்தமாச், சொன்னநிலத் தோர்களுக்காத் தூது சென்ற" (இலஞ்சியுலா, 113–4.) அயம் - இரும்பு.

248. கணி கொண்ட - சோதிடனது தன்மையைக்கொண்ட. வான் கதிர்-வெண்மையான கிரணங்கள். வேங்கை பூத்தலும் சந்திரன் பரிவேடம் கொள்ளுதலும் மணஞ்செய்தற்குரிய நாளென்பது குறிஞ்சிநிலத்தார் கொள்கை; "வேங்கையு மொள்ளிணர் விரிந்தன, நெடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே" அகநா. உ.

249. வளையும் ஆடையும். தாயொடும் அயலாரினத்தொடும். எளியேன் பழியை மொழிவேனென. மன்ன: விளி. மின் மறைத்தனள்.

250. நண்ணாரென - பகைவரைப்போல. நண்ணாரென நண்ணுவரென்றது முரண். மாதவி - குருக்கத்தி. விண் ஆருற - விண்ணுலகத்தைப் பொருந்த. மானை - தலைவியை.

பகல் வருவானை இரவு வருகென்றல்.

251. மாற்றுமை யார்பொழில் வாய்ப்பக னீவால் வாய்மைமன்ன
போற்றுமை யார்வடி வானயன் காணரும் போர்விடையான்
சாற்றுமை யாளிடப் பாகன் சிராமலைத் தாழ்குழற்கு
வேற்றுமை யாவதன் றல்வழி கண்டிவண் மேவிடினே. (கo)

இரவு வருவானைப் பகல் வருகென்றல்.

252. மன்று ணடித்தெமை யாள்வோன் சிராமலை மன்னமுத்தம்
ஒன்று நகைக்கொடி யுன்பொருட் டாக வுவந்துகதிர்
துன்று தினைப்புனங் காக்கும்வை வேலொடு தோளிணையும்
என்று முனக்குத் துணையாக நீயிர வெய்தலையே. (கக)

பகலினும் இரவினும் பயின்று வருகென்றல்.

253. பண்ணார் கிளிமொழி பாகன் சிராமலைப் பார்த்திபநீ
தண்ணார் பொழிலிடை யல்லும் பகலுமென் ருழ்குழலின்
கண்ணு னனமெனுங் காவிசெந் தாமரை கண்மலா
விண்ணார் மதியினன் போலிவண் மேவ விரும்புகவே. (கஉ)

---

251. பகலில் நீ வருதலை மாற்று. மையார்வடிவான் - மேகத்தைப் போன்ற திருவுருவத்தையுடைய திருமால். சாற்று உமையாள். வேற்றுமை யாவது அன்று-வேறுபாடு அன்று; உடன்பாடே என்றபடி. அல் வழிகண்டு-இரவில் வழியைப்பார்த்து. இதில் வேற்றுமை அல்வழியென்னும் சந்தி வகைகளின் பெயர்கள் தொனிக்கின்றன; கோடீச். 208.

252. மன்ன : விளி. கொடி - தலைவி. என்றும் - எக்காலத்தும். இரவு எய்தலை - இரவில் வாராதே. தலைவி தினைப்புனங்காப்பாள்; ஆதலின் இரவில் வாராமற் பகலிலே வருக.

253. கண்ணெனுங் காவி மலர மதியைப்போலவும் ஆனனமெனும் தாமரை மலர இனனைப்போலவும் வருக; இனன் - சூரியன்.

பகலினும் இரவினும் அகலிவ ணென்றல்.

254. பிறவாத வாழ்வு தனையா னெனதறப் பெற்றவன்பாற்
கிறவாத வண்ண மருள்வோன் சிராமலை யீசற்கன்ப
நறவார் பொழிற்கண் ணலராம் பகல்வரி னள்ளிருள்வாய்
மறவா தரிகரி தேடும் வரேலெம் வயினினியே. (கங)

உரவோன் நாடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறல்.

255. ஆடு நடனத்த னெம்மான் சிராமலை யன்பவுன்றன்
நாடு நகர்குலம் வாய்மை மரபொடு நற்புகழ்சீர்
நீடு மிவையன்றி யெம்பெரு மாட்டி நிகரிலிபக்
கோடு நிகர்முலைக் கொவ்வா விலையிக் குவலையமே. (கச)

ஆறுபார்த் துற்ற அச்சங் கூறல்.

256. பத்தா னனனிசை கேட்டுயிர் முன்னம் பரிந்தளித்த
சித்தான வீசன் சிராமலை வாழுந் திறற்புயநீ
முத்தான வெற்படு மாளி பயில்கட முற்றுமிகந்
தித்தான நாடி வருதற் கிரங்கு மிளங்கொடியே. (கரு)

---

254. யான் எனது அற - அகங்கார மமகாரங்கள் கெட. இறவாத வண்ணம் - தன்னைவிட்டு நீங்காதபடி. பகல் வரின் அலர் ஆம். பொழிற் கண் அலராமென்றது ஒரு நயம். அரி கரி தேடும் - சிங்கம் யானையைத் தேடும். எம்வயின் வரேல்.

255. இவள் நகிலுக்கு உலகம் முழுவதும் கொடுப்பினும் விலை யாகாது; ஆதலால் உன்னுடைய பரிசம் வேண்டுவதன்று. இவள் உன்குலம் முதலியவற்றிற்கு ஏற்றவளாதலின் நீ மணஞ்செய்துகொள்க. "வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க், கோடாது நீர்கொடுப்பி னல்லது - கோடா, எழிலு முலையு மிரண்டிற்கு முந்நீர்ப், பொழிலும் விலையாமோ போந்து" (திணை மா. 15) என்னும் செய்யுள் இதனோடு ஒருவாறு ஒத்துளது.

256. பத்து ஆனனன் - இராவணன். சித்து - அறிவு. முத் தான வெற்பு - மூன்று மதங்களையுடைய யானை. கடம் - காடு. இத்தானம் - இவ் விடத்தை.

ஆற்றுத் தன்மை ஆற்றக் கூறல்.

257. காமக் கடுங்கன லானுள மாழ்கக் கரும்பினலர்
நாமக் கொடுங்கணை பாயக் கலைவளை நாணகலச்
சேமப் பொருளன வெம்மான் சிராமலைச் செந்திருவாம்
தாமக் குழலி தளர்ந்தன ணீயளி தந்தருளே. (கசு)

காவல் மிகவுரைத்தல்.

258. வேத மயன்றிரு மால்பணிந் தேத்த விமலக்கன்பாய்
நாத முடிவினின் றுடுஞ் சிராமலை நாதர்க்கன்பா
நீத நகர்புரப் போரா விரவி னிகழ்பறைக்கு
மாத சுணமென மாழ்கிக்கண் ணீரை வழங்கிடுமே. (கஎ)

காம மிகவுரைத்தல்.

259. நீரம் புலிதரித் தாடுஞ் சிராமலை நித்தர்க்கன்பா
கூரம் பநங்கன் றொடவுறு காமக் கொடியகனல்
ஊரம் படிவத் தொடுநெஞ்ச மார்வெப் பொடுங்குதற்குன்
சீரம் புயத்தட மன்றியுண் டோமலர்ச் சேயிழைக்கே. (கஅ)

---

257. கரும்பின் - மன்மதனுடைய கருப்புவில்லில் தொடுக்கப்படுகிற. அலர் நாமக் கொடுங்கணை - மலராகிய அச்சத்தைத் தரும் கொடிய அம்பு. கலை - ஆடை. அளி - அன்பு.

258. வேதம் - வேதபுருடன். நீதம் - நீதி. நகர் புரப்போர் - ஊர் காவலர். அசுணம் - இசையறிவதொரு விலங்கு. இது பறையோசையைக் கேட்டால் வருந்தும்; "யாழ், நறையடுத்த வசுணநன் மாச்செவிப், பறை யடுத்தது போலுமென் பாவரோ" கம்ப. பாயிரம்.

259. கூர் அம்பு - கூரிய அம்பை. தொட - தொடுக்க. படிவம் - உருவம். அம்புயத்தடம் - அழகிய தோட்பரப்பு; தாமரைத்தடாகமென்பது மற்றொருபொருள். வெப்பம் ஒடுங்குதற்குத் தாமரைத்தடாகம் வேண்டுமென்பது ஒரு நயம்.

கனவு நலிபுரைத்தல்.

260. மையார் விழியுமை பாகன் சிராமலை மானிரவில்
எய்யாம லீதனக் கோங்கம் வருடி யிதழமுதம்
பொய்யா தருந்தி மகிழுங் கனவின் புணர்ப்பைமன்னு
மெய்யா மெனவிழித் திட்டாண் முலைக்கு விழுமுத்தமே. ()

கவின் அழிபுரைத்தல்.

261. சேலாகி நீளும் விழியுமை பாகன் சிறந்தெவர்க்கு
மேலான வாழ்வரு ளெம்மான் சிராமலை மேவுமன்பா
பாலாகி யின்பம் பயின்மொழி யாணின் பணைப்புயந்தோய்
மாலாகி மாமலர் மான்வண்ண மாகி மயங்கினளே. (உ0)

கஎ. ஒருவழித் தணத்தல்.

தன்பதிக்கு அகற்சி தலைவன் சாற்றல்.

262. கரும்பார் தரள நிறைவயல் சூழுங் கடிநகர்வாய்ச்
சுரும்பார்குழல்வஞ்சியானின் றுபோயென்றுதோன் றுமுன்னம்
விரும்பார் புரநகைத் தட்டோன் சிராமலை மேவுவன்கோங்
கரும்பா முலைமட மான்மரு ளாவண்ண மாற்றுகவே. (க)

---

260. மான் - தலைவி ; எழுவாய். எய்யாமல் - அறியாமல். புணர்ப்பை - மாயச்செய்கையை. என - என்று கருதி. முத்தம் - கண்ணீர்த்துளி.

261. மாலாகி - மயக்கமுடையவளாகி. மாமலர்மான் - திருமகள் ; அவள்வண்ணம் - பொன்னிறம் ; என்றது பசலைநிறத்தை. திருமாலாகிப் பின் திருமகளுமானுளென்பது மற்றொருபொருள்.

262. முத்துப் பிறக்கும் இடங்களுட் கரும்பும் ஒன்று. வஞ்சி: விளி. இன்றுபோய். என்று - சூரியன்.

மென்சொற் பாங்கி விலக்கல்.

263. துறந்தார் வினை தவிர்த் தாள்வோன் சிராமலைத் தூமொழியார்
மறந்தார் பிரிந்தன ரென்னுமுற் காதை வழுத்தமன்னு
புறந்தாழ் குழனங்கை வாடுவ ணீநின் புகழ்ப்பதிக்குச்
சிறந்தார் தரச்செலி னெங்ஙனம் வாழுவள் சேயிழையே. (உ)

தலைவன் நீங்கல் வேண்டல்.

264. ஆண்டே தனையெனக் கீந்தோன் சிராமலை யாயிழைநெஞ்
சீண்டே தடுக்கவு மூழ்வினை யாண்டெனை யீர்ப்பமனம்
பூண்டே னெனது நகர்க்கேகி நாளைப் புலருமுனம்
மீண்டே யிவணுற மேவுவன் மாழ்குதல் வீடுகவே. (௩)

தலைவனைப் பாங்கி விடுத்தல்.

265. இமையா சலக்கொடி பாகன் சிராமலை யேந்திழையின்,
கமையா ருயிர்க்குயிர் நீயா தலினந்தக் கன்னிக்கின்றி
யமையா வியல்குறித் தின்றேகி நாளை யணையிற்றந்தி
குமையா முனமுயிர் காத்ததிற் கோடி குணமன்னனே. (௪)

---

263. மறந்தார் - கணவர் தம் மனைவியரை மறந்தார். பிரிந்தனர் - அவர் தம் மனைவியரைப் பிரிந்தனர். முற்காதை வழுத்த - பண்டைக்காலத்துக் கதைகளைச் சொல்ல. வழுத்த நங்கை வாடுவள். ஆர்தர - பொருந்தியிருக்க. மறந்தவர்கதைகளையும் பிரிந்தவர்கதைகளையும் சொன்னாலே வாடுபவள் நீபிரிந்தால் வாழ்தலரிது.

பி-ம். 'துறந்தார் கதைகளை யெம்மான் சிராமலைத் தூமொழியார்
மறந்தாகி லுஞ்சொலின் வாடுவ ணீசெல மன்னவுன்னிற்
புறந்தாழ் கரிய மலர்ப்பூங் குழலெழிற் பொன்னினுயிர்
சிறந்தார் தாவிங்கு வாழ்ந்திட யானென் றெருட்டுவனே.'

264. ஆண்டு - என்னை ஆட்கொண்டு. ஆயிழை: விளி. புலருமுனம் - விடிவதற்குமுன்பு.

265. கமை - க்ஷமை. இன்றியமையாத இயல்பை எண்ணி. தந்தி குமையாமுனம் உயிர்காத்ததென்றது களிறுதருபுணர்ச்சியை நினைவுறுத்திய படி. கோடி குணம் - கோடியளவு குணமுள்ளதாகும்.

விசேடக்குறிப்பு:—பிரிவிற்றோன்றும் அவத்தையின்வகைகளை விப்பிரலம்பசிங்காரமென்றும், புணர்விற்றோன்றும் அவத்தாபேதங்களைச் சம்போகசிங்காரமென்றும் வடநூலார் கூறுப. அவற்றுள் முன்னது, கல்வி செல்வம் முதலியகருதி நாயகன்பிரிவுற்றகாலத்தில் தம்மில் நிகழ்வனவாகிய வேதனைகளை அந்நாயகனுக்குச்சொல்லும்படி சுகம் பிகம் முதலியவற்றைத் தூதுவிடுதன்முதலியவைகளாம். பின்னது நாயகன்கூடியகாலத்து அவனை முன்னிலையாக்கி உமதுபிரிவில் எவைகள் மிக்கதுன்பத்தைவிளைத்தனவோ அந்த இந்து மந்தமாருதாதிகள் இப்பொழுது மிக்க இன்பம்விளைக்கின்றனவென்பது போல்வனவாம். பிரிவு, ஒருவழித்தணத்தல் வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் எனக் களவிலும், பரத்தையிற்பிரிவு ஓதற்பிரிவு, காவற்பிரிவு, தூதிற்பிரிவு, துணைவயிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு எனக் கற்பிலும் வருவனவாம். புணர்ச்சி, இயற்கைப்புணர்ச்சி இடந்தலைப்பாடு பாங்கற்கூட்டம் பாங்கியிற்கூட்டம் எனக் களவிலும், குரவரிற்புணர்ச்சி வாயிற்கூட்டம் எனக் கற்பினும் வருவனவாம். இதில் முன்னது வதுவையானபின் னிகழ்வது. பின்னது தலைவியின் ஊடலைப் பாணன், பாடினி முதலிய வாயில்களாற் றீர்த்துக் கூடுவது. இவ்விரண்டினும் ஒவ்வொன்றிற்கும் பலதுறைகளுண்டு. ஆகமொத்தம் துறைகள் ஐந்திணைக்கோவைகளில் நானூறுமுதல் ஐந்நூறுவரை காணப்படுகின்றன.

இது முற்கூறியபடி குறிப்பாக (அருத்தாபத்தியாக) ஒரு பொருள் தருதலாலே (ஆறுவதுபாட்டைப்போல) உதாரமென்னும் குணத்தின் பாற்படும்; இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

இப்பாட்டும் எழாவதுபாட்டுப்போலவே அருத்தாபத்தியாற் பொருள் தோன்றுதலாலே தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணியாம். (அ)

9. விண்டு சித்தமு னிவர்தா லானும்
மேவிய நிலவுல கெல்லாம்
கொண்டுவந் துய்ய நிலவிடு மமுதங்
கொடுத்திடும் வாய்மையி னானும்
மண்டுவெப் பொழித்த லானுமற் றொருவாண்
மதிநிக ரன்னையே நின்னைப்
பண்டுபாற் கடல்வந் தவளுடன் பிறப்பாம்
பாவையென் றறிவரா னல்லோர்.

பதவுரை:—விண்டுசித்தமுன் இவர்தரலானும் - (1) எம்பெருமானது திருவுள்ளத்திலே முன்பு தோன்றி விளங்குதலாலும்; (விண்டுசித்தமுனிவர் தரலானும்-) (2) பெரியாழ்வார் தம் திருமகளாராகப் பெற்றிடுதலாலும்; மேவிய நிலவுலகெல்லாம் - (1) பொருந்திய நிலவுலகிலுள்ள பொருள்களெல்லாம்; (2) யாவரும் விரும்பும்படி விளங்குகின்ற பெரியோர்களெல்லாம்; கொண்டு உவந்து உய்ய - (1) ஏற்று இன்பமடைந்துபிழைக்க; (2) குருமுகமாக அத்தியயனம்பண்ணி ஆநந்தமெய்தி நன்குவாழ; நிலவு இடும் அமுதம் - (1) சந்திரிகையைச்செய்கின்ற அமுதகிரணத்தை; (நிலவிடுமமுதம் -) (2) எங்கும் விளங்குகின்ற அமிர்தத்துக்கு ஒப்பான இனிமைவாய்ந்த திருப்பாவை முதலிய திவ்யப்பிரபந்தங்களை; கொடுத்திடும் வாய்மையினானும்- (1) தருகின்ற உண்மையுடைமையாலும்; (2) அருளியசாமர்த்தியத்தினாலும்; மண்டுவெப்பு ஒழித்தலானும் - (1) (வெய்யில் முதலியவற்றாலுண்டாகிய) மிக்க வெப்பத்தையெல்லாம் போக்குதலாலும்; (2) நெருங்குகின்ற தாபத்திரயங்களையும் போக்கியருளுதலாலும்; மற்றொரு மதிநிகர் - வேறொரு அமுதகிரணனைப்போன்ற; அன்னையே - தாயே!; நின்னை - தேவரீரை; விண்டுசித்தமுன் இவர்தரலானும் எம்பெருமானது திருமார்பில் இறையும் அகலகில்லாது விளங்கிக்கொண்டிருத்தலாலும்; மேவிய நிலவுலகெல்லாம் - தம்மையடைந்த லீலாவிபூதியிலுள்ளாரெல்லாரும்; கொண்டு உவந்து உய்ய- பெற்று மகிழ்ந்து வாழ; நிலவிடும் அமுதம் கொடுத்திடும் வாய்மையினானும்- திவ்வியதேஜோமயமாய்விளங்குகின்ற பரந்தாமத்தைத் தந்தருளுஞ் சொல்வன்மையுடைமையாலும்; மண்டுவெப்பு ஒழித்தலானும் - (மகாபராதிகள் விடயத்திலே யெம்பெருமானுக்கு) மிகுகின்ற சீற்றத்தை மாற்றுதலாலும்; பண்டு - அமுதமதனகாலத்து; பாற்கடல் - பயோததியில்; வந்தவள் - திருவவதரித்தருளியவராகிய பெரியபிராட்டியாருக்கு; உடன்பிறப்பாம் பாவையென்று - (1) கூடத்திருவவதரித்தவராகிய (சகோதரியாகிய) திருமகளாரென்று; (2) சமானமாகிய உத்தமியாரென்று; நல்லோர் - பரமசாதுக்கள்; அறிவர் - (எக்காலத்தும்) அறிந்துகொள்ளுகிறார்கள் எ-று. ஆல் - அசை.

கருத்து:—தேவரீரை அடியேன்மாத்திரமன்று, பரமபாகவதர்களாகிய சாதுக்களும் பெரியபிராட்டியாருக்குச் சமானமான அழகு, குணம், சீலமுமுடையீரென்று தெரிந்துகொண்டிருக்கின்றனரென்பது.

விசேடக்குறிப்பு:—சந்திரபரமாகப் பொருள்கொள்ளும்போது சித்தமுன் என்பதைச் சித்தத்தில் முன்பு என விரித்து ஏழாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகவும், பெரியபிராட்டியார்பரமாகப் பொருள்கொள்ளும்போது ஏழாம்வேற்றுமை விரியாகவும் கொள்க. இங்கு முன் ஏழாம்

வேற்றுமையுருபு. சித்தமென்பது இதயத்தையன்றி நெஞ்சென்பதுபோலத் தானியாகுபெயராய் மார்பையும் குறிக்குமென்க. மேவிய என்பதைப் பெயரெச்சமாகக்கொண்டு முதலில் பொருந்தியவென்றும், இறுதியில் அடைந்தவென்றும், இடையில் செய்யியவென்னும் வினையெச்சமாகக்கொண்டு விரும்பும்படியென்றும் பொருள்கொள்ளப்பட்டது. சந்திரபரமாகப் பொருள் கொள்கையில் நிலவு இடும் எனப் பிரித்துப் பொருள்கூறுக. அமுதம் என்பது காரியவாகுபெயராய்க் கிரணத்தையும், உவமையாகுபெயராய்த் திவ்யப்பிரபந்தத்தையும், இயல்பானே பரந்தாமத்தையும் குறித்தது. வாய்மையென்பது - உண்மை, வன்மை, சொல் என்னும் பலபொருள்தருஞ்சொல். இங்கு வன்மையாவது: சத்திய சங்கற்பனாகிய வெம்பெருமானது குளிர்ந்த திருவுள்ளத்திலே சீற்றம்பிறவாதபடிசெய்கின்ற சாமர்த்தியாதிசயம். சொல்லாவது: சுதந்திரனாய்ச்சேதநர்களை அவரவர்கள்செய்துள்ள அபராதங்களுக்குத் தக்கபடி தண்டிக்கப் பிரயத்தனப்படுகிற சர்வேச்சுரன் அவ்வாறு செய்யாது பொறுத்தருளும்படிசெய்யவல்ல இன்சொல். இதனைச் சாத்வவாதமென்ப. வெப்பு என்பதற்கு இங்கு வெம்மை, வருத்தம், கோபம் என்று பொருள்கொள்ளப்பட்டது. வெயில் முதலியவைகள் நெருப்பு, மின்னல், விடம் என்பனவாம். தாபத்திரயமாவது: ஆத்யாத்மிகம், ஆதிதெய்விகம், ஆதிபௌதிகமென்பனவாம். இவற்றுள் முதலது: தன்னால்வருது; அதாவது.- பலவகையுடற்பிணிகளாலும், மனவருத்தத்தாலும் வருவனவாம். இரண்டாவது: இடி மின்னல் முதலியவற்றால் வருவனவாம். மூன்றுவது: புலி, கரடி, பாம்பு முதலிய துஷ்டஜந்துக்களால் வருவனவாம். பூமண்டலத்துக்குண்டாகும் வெப்பங்களெல்லாம் சந்திரனுடைய அமுதகிரணங்களாலே தணிகின்றனவென்பதை, "மண்டலம்பயி லுரகர்பே ருயிர்ப்பினுன் மயங்கி, மண்டலம்பொர வருந்திய பெருந்துயர் மாற, மண்டலந்தனை நிழலெனு மரபினுற் றனது, மண்டலம்பொழி யமுதின்மெய் குளிரவே வைத்தோன்" என்னும் பாரதப்பாடலுணர்த்த லோர்க. மண்டுவெப்பென்றதற்கு, சாபராதிகள்விடயத்தில் மிகுகின்ற கோபமென்று பொருள்கொள்ளலாயிற்று. பாவை - உவமையாகுபெயர். திருப்பாற்கடலிற் றோன்றியதனாலே சந்திரனைப் பெரியபிராட்டியாருக்குச் சகோதரனாகச்சொல்வதுபோலே சிலேடையினாலே சந்திரனாகச்சொல்லப்படுகிறநாய்ச்சியாரைச் சகோதரியாகச் சொல்லியிருக்கிறது. ஞாதி, பந்து, சோதர சப்தங்களை வடநூலார் உவமவுருபாகக் கொண்டாள்வர்.

இப்பாட்டு, நெடிலும், ஒற்றடுத்தும் அடாமலும் வரும் வல்லினமும் வந்து நெகிழிசையின்றியிருத்தலாற் செறிவு என்னுங் குணவணியாகும்.

இதனிலக்கணம் முதற்பாட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. நெகிழிசை யாவது: வல்லினம்வராது மற்றையஇனங்கள் பெரும்பாலும் வருதலையுடையது.

அணி:—நிலவுலகு, அன்னை, நின்னை: இவை வழியெதுகை யென்னும் சொல்லணியாம். இப்பாட்டுச் சிலேடையுவமையணி; "இருபொருட் கொப்புமை யியம்புவ துவமை" என்பர் சந்திராலோகநூலார். "அற்புதஞ் சிலேடை யதிசயம் விரோதம், ஒப்புமைக் கூட்டந் தற்குறிப் பேற்றம், விலக்கே யேது வென வேண்டவும் படுமே" எனத் தண்டியாசிரியர்கூறியபடி இது சிலேடையுவமையெனப்பட்டது. (கூ)

10. கோதைநின் கோதை விரைகமழ் நலனுர்
கோதையைக் கொண்டுபோய்க் கொடுத்துத்
தாதையோ வெனினின் றுதிசிறி தான்வ
சமாமிறை யவனிட மிருந்து
காதினுக் கமுதாந் துதிபல நூறு
களாலுமுன் னம்மடை யாத
மேதகும் பதவிக் குத்தகு தியதாம்
வியனருண் மேயின னன்றே.

பதவுரை:—கோதை - நாய்ச்சியாரே!; நின்கோதை விரைகமழ்நலனுர் கோதையைக்கொண்டுபோய்க்கொடுத்து — தேவரீரது திருக்குழற்கற்றையின் பரிமளம் கமழ்தலாலே இன்பம்பொருந்திய திருமாலையைக்கொண்டுபோய்ச் சமர்ப்பித்து; தாதையோவெனில் - தேவரீர் திருத்தமப்பனுரோவென்றால்; நின்துதிசிறிதான் - தேவரீருடையதோத்திரலேசத்தினலே; வசமாம் இறையவனிடமிருந்து - வசியனுகிய பகவானினின்றும்; காதினுக்கு அமுதாம் - கர்ணமிருதமாயிருக்கிற; துதி பலநூறுகளாலும்-அநேகசதந்தோத்திரங்களாலும்; முன்னம் அடையாத - முன்புபெருத; மேதகும்பதவிக்குத்தகுதியதாம் - மகத்தரபதத்துக் கநுகுணமாகிய; வியனருள் - மேலான அநுக்கிரகத்தை; மேயினன் - அடைந்தனன்; அன்றே - அல்லவா எ-று. அன்று ஏ அசைகளுமாகும்

கருத்து:—தேவரீருடைய திருத்தமப்பனுருங்கூட உமது தோத்திரலேசத்தாலே சர்வசுவாதீனனுயிருக்கிற பகவானிடத்திலிருந்து கர்ணமிர்தமாயிருக்கிற துதிசதங்களாலேயும் முன்படையப்பெருததாயிருக்கிற பெரியாழ்வாரென்னும் பதவிக்குத் தகுதியாகிய பிரசாதத்தைத் தேவரீர் திருக்குழற்கற்றையிற் சூட்டி வாசமூட்டிக்கொடுத்த திருமாலையைக்கொண்டு

போய்ச்சமர்ப்பித்துப் பெற்றனரென்றால் அடியேனையனையார் யாருடைய புருஷகாரபலத்தாலே உஜ்ஜீவிப்பார்கள். இது தேவரீருக்குத் தெரியாத விடயமன்றே! என்பது.

விசேடக்குறிப்பு:—கோதை: அண்மைவிளி. நின் துதி - நின்விடயமான துதி; நின்னாற்செய்யப்பட்ட துதியென்றுமாம். நலனார்தல் - திருவுள்ளத்து இரம்மியமாயிருத்தல். கோதைமூன்றில் முதலது திருநாமம், இரண்டாவது திருக்குழற்கற்றை, மூன்றாவது திருமாலை. நின் என்பதைத் தாதையோடுங் கூட்டிப் பொருள்கொள்ளப்பட்டது. இறையவன் - துட்டநிக்கிரக சிட்ட பரிபாலனஞ்செய்பவன். மேதகும் பதவி - பகவத்விடயத்தில் பொங்கு பரிவாலே வந்த பெரியாழ்வாரென்னும் பதவி. தகுதியாம் வியனருள் - அநுகுணமான பிரசாதம்; அதாவது: நித்யசூரிகளும்வந்திக்கத்தக்க மாமனாராக் கொள்கை; மேதகுபதவியாவது: உண்டிராக்கிடக்கும்போது முடலுக்கே கரைந்துநையும் சம்சாரிசேதனரைக்காட்டிலும், செய்தவமுடைய இருடிகள் உயர்ந்தவராவர்; அத்தவமகிமையாலே ஆன்மஞானம் கைவந்த பரம விருடியர் நனியுயர்ந்தவராவர்; அவர்களைக்காட்டிலும் மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்கள் நனிதவவுயர்ந்தவராவர்; அவர்களைக்காட்டிலும் பொங்கும்பரிவாலே தன்நன்மையைப்பேணாதே எம்பெருமானுக்குப் பல்லாண்டுபாடிய பெரியாழ்வார் உயர்வறவுயர்ந்தவராவர்;—இதுவேயாம்.

இப்பாட்டு, மூவினமும் விரவிவரத்தொடுக்கப்பட்டிருத்தலிற் சமநிலையென்னுங் குணவணியாம். இதனிலக்கணம் நாலாவதுபாட்டில் எழுதப் பட்டிருக்கிறது. (௧0)

11\. தெக்கண திக்கும் பக்குவ மாநற்
செய்கையா லேயுநின் பிறப்பால்
திக்கனைத் தினுக்கு முத்தர மாகிச்
சிறந்ததத் திசைதனி லேயே
மிக்கசீர்க் கோதா யறிதுயி லமரும்
வியனரங் கமன்னவ னாலும்
தக்கதா கியநன் மதிப்பொடு கடைக்கண்
சந்ததம் வைத்திடப் படுமால்.

பதவுரை:—மிக்கசீர்க்கோதாய் - (தேவிமாராவார் பலரினும்) மேலான சிறப்புவாய்ந்த சூடிக்கொடுத்தருள்நாய்ச்சியாரே!; தெக்கணதிக்கும் - தென் திசையும்; பக்குவம் ஆம் நற் செய்கையால் - பலோன்முகமான புண்ணியத் தாலே; ஏயும் - லபித்ததாகிய, நின்பிறப்பால்-தேவரீர் திருவவதாரத்தாலே;

திக்கனைத்தினுக்கும் - திசைகளெல்லாவற்றிற்கும்; உத்தரமாகி - (1) வடதிசையாகி; (2) மேலானதாகி; சிறந்தது - சிறப்புற்றது; அத் திசைதனிலேயே - அந்தத் தென்திசையிலேதானே; அறிதுயிலமரும் - யோகநித்திரை செய்தருளுகின்ற; வியன் - பெருமைபெற்ற; அரங்கமன்னவனாலும் - ஸ்ரீரங்கராஜனாலேயும்; தக்கது ஆகிய நன்மதிப்பொடு - தகுதியான வெகுமானத்தோடு; சந்ததம் - எப்பொழுதும்; கடைக்கண் வைத்திடப்படும் - கடாக்ஷிக்கப்படும். எ-று. ஆல் - அசை.

கருத்து:—தேவரீர் திருவவதரித்தருளுவதற் கிடமாயிருந்ததொரு சம்பந்தத்தாலே அசேதநமான தெற்குத்திக்கும் சர்வோத்தரமாக ஆகியதுமன்றி அறிதுயிலமர்ந்தருளுகின்ற அழகியமணவாளனது கடாக்ஷவீக்ஷணத்திற்குப் பாத்திரமாக ஆகுமேயானால் தேவரீர் திருவடிசம்பந்தம்பெற்ற அடியேன் சர்வோத்கிருஷ்டனாகி, பகவத்கடாக்ஷவீக்ஷணத்திற்கும் யோக்கியனாக ஆவேனென்பதற் கென்னகுறை (ஒன்றுமில்லை) என்பதாம்.

விசேடக்குறிப்பு:— தெக்கணம் என்பது தட்சிணவென்னும் வடசொல்லின் றிரிவு. பக்குவமாம் நற்செய்கையென்றது பலோன்முகமான புண்ணிய விசேடத்தை. இங்குப் பக்குவமா நற்செய்கையென்றது பிராட்டியாருடைய நிர்ஹேதுக பரமகிருபையை. நின்பிறப்பால் என்பதற்குத் தேவரீர் திருவவதரித்தருளுவதற்கிடமாயிருத்தலாகிய ஒரு சம்பந்தமாத்திரத்தாலேயென்று பொருள் விரிக்கப்பட்டது. உத்தரம் - வடதிசை; மேன்மையுமாம். மிக்கசீர்க்கோதாய் என்றது, தன்னடியார்களைச் சர்வேசுவரனனுக்கிரகத்திற் கருகராம்படி செய்தருளுவதில் புருஷகாரபூதையான பெரியபிராட்டியாரைக் காட்டிலும் சிறப்புவாய்ந்தவராதலானே.

இப்பாட்டு, வல்லினவெழுத்துக்களேமிகுந் திறுக்கமுடையதாக இருத்தலாலும், பல வழியெதுகையமைந்திருத்தலாலும் முதற்பாட்டைப்போலச் செறிவு என்னுங் குணவணியதாம். வெளிப்படையாகத்தோன்றும் பொருளேயன்றிக் குறிப்பினாலும் ஒருபொருடோன்றுதலாலே ஆறுவதுபாட்டைப் போல உதாரமென்னுங் குணவணியையுடையதுமாம். இவற்றினிலக்கணம் முன்னே சொல்லப்பட்டன.

அணி:-தெக்கணதிக்கும்பக்குவம்: வழியெதுகையென்னுஞ்சொல்லணி. தெக்கணதிக்குத் திக்கனைத்தினுக்கு முத்தரமாகிச் சிறந்ததென்னுமிடத்து

மூரண்விளைந்தழிவணியாம்; வெளிப்படையாகத்தோன்றும் பொருளன்றிக் குறிப்பினுல் வேருெருபொருள் சிறப்புப்படத் தோன்றுதலாலே இப்பாட்டு, தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணியாம். தெக்கணதிக்கு உத்தரமாகிச் சிறந்ததென்பதையும், அத்திக்கு அறிதுயிலமர்ந்தருள்கின்ற அரங்கநாயகனுலும் அநவரதமும் பகுமானபூர்வகமாகக் கடாக்ஷிக்கப்படுகிறதென் பதையும் சாதிக்கிறதற்கு நாய்ச்சியாரது திருவவதாரரூபபதார்த்தம் ஹேதுவாக்கப்பட்டிருத்தலாலே இப்பாட்டுப் பதப்பொருட்செய்யுட்குறியணியாம். இவற்றினிலக்கணமெல்லாம் முன்னமே சொல்லப்பட்டன. அறிதுயிலமர்ந்தருளும் அரங்கமன்னனுராலும் சந்ததம் கடைக்கண்வைக்கப்படுமென்னுமிடத்துத் துயிலமர்ந்தருளுதலாகிய தடையுளதாகவும் கடாக்ஷிப்பதாகிய காரியம்பிறத்தல் சொல்லப்பட்டிருத்தலால் மூன்ருவது பிறிதாராய்ச்சியணியுமாம். இவ்வாறு பல அலங்காரங்களமைந்திருத்தலாலே சேர்வையணியுமாம்.

12. கோதையே கோதா வரிநின்றன் பெயரின்
கூட்டத்தி னுலிந்த வுலகைப்
போதவும் புனலாற் புனிதம தாகப்
புரிந்திடும் புகலுமெந் நதியில்
மேதகுங் கங்கை யாதிய வாகும்
வியன்னதி பலவும்வந் துவந்தே
ஓதிடும் பருவத் துறைதலா லென்றும்
முயர்புண்ய நதிகளா யினவால்.

பதவுரை:—கோதையே - நாய்ச்சியாரே; கோதாவரி - கோதாவரியென்னும் நதியானது. நின்றன்பெயரின் கூட்டத்தினுல் - தேவரீருடைய திருநாமசம்பந்தமாத்திரத்தாலே; இந்தவுலகை - இச்சகத்தை; போதவும் - மிகவும்; புனலால் - தன்னுடைய தீர்த்தத்தினுலே; புனிதமது ஆகப் புரிந்திடும் - பரிசுத்தமாகும்படிசெய்யும்; புகலும் எந்நதியில் - சொல்லப்பட்ட யாதொரு கோதாவரிநதியில்; மேதகும் - மேன்மையாகிய; கங்கையாதிய வாகும் வியன் நதிபலவும் - பாகீரதிமுதலியவைகளாகிய மகிமைவாய்ந்த நதிகள் பலவும்; ஓதிடும் பருவத்து - மேளாவென்று சொல்லப்படும் சமயங்கடோறும்; வந்துவந்து-சேர்ந்துசேர்ந்து; (வந்து உவந்து என்றுமாம்); உறைதலால் - தங்குதலாலே; என்றும் - எக்காலமும்; உயர் புண்ணிய நதிகளாயின - (தம்மில் வந்து நீராடுபவர்களையெல்லாம்) புனிதவான்களாகச் செய்யும் மேலான நதிகளாயின, எ-று. ஆல் அசை.

கருத்து:—கோதாய்! தேவரீர்திருநாமசம்பந்தமாத்திரத்தாலேயே கோதாவரியென்னும் நதியானது தன்னுடைய தீர்த்தத்தினாலே இம்மண்ணுலகத்தைப் பரமபாவனமாகச்செய்கின்றது. இதுமாத்திரமோ! கங்கை யமுனை முதலிய மகாநதிகளும் யாதொரு கோதாவரிநதியில் பருவகாலங்கடோறும் வந்துவந்து தங்குதலாலேயே தம்மில்வந்து நீராடுகின்றவர்களையெல்லாம் நெடுங்காலமாகப் புனிதவான்களாகச் செய்யவல்லமையுடையவைகளாயினவெனில், தேவரீர் திருவடிசம்பந்தம்பெற்றிருப்பதாலேயே அடியேன் மிகவும் இவ்வுலகத்துள்ளார்க் குபகாரியாயிருக்கிறேன் என்பதற்கும் அடியேனை யடுத்தவர்களும் அவ்வாறு ஆயிருக்கிறார்களென்பதற்கும் ஆட்சேபமென்னையென்பதாம்.

விசேடக்குறிப்பு:—கோதாவரிநதிக்கும் கோதையென்னும் பெயருண்மை காண்க. கோதையென்னும் தேவரீர் திருநாமமாகிய இரண்டு அக்கரங்களைக் கோதாவரிநதி முதலிற் கொண்டிருக்கிற ஒரு சம்பந்தமாத்திரையானே யென்றுஞ் சொல்லலாம்.

பருவமாவது: பன்னிரண்டுவருடத்துக்கு ஒருதடவை, கும்பகோணத்திற் கொண்டாடப்படும் மகாமகம்போலப் பஞ்சவடிக்கும் நாசிகைக்கும் மத்தியிலுள்ள கோதாவரிநதியில் ஆடிமீ முதல் ஒருவருடம் மேளாவென்னும் உற்சவங் கொண்டாடப்பட்டுவருகிறது (அந்தப்பருவகாலங்களில் கங்கைமுதலிய நதிகளெல்லாம் அந்தவிடத்திற் போயிருந்து பரிசுத்திபெறுகின்றனவென்பது புராணவரலாறு); இந்த உற்சவசமயமாம். வெவ்வேறிடங்களில் வெவ்வேறுகாலங்களில் மேளாவென்னும் உற்சவம் நடந்துகொண்டுவருகிறது.

மேற்கூறியபடி குறிப்பினான் மற்றொருபொருடோன்றுதலாலே இப்பாட்டு, முற்பாட்டுப்போல உதாரமென்னுங் குணவணியதாம். இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

அணி:—இப்பாட்டும் முற்கூறியபடி அருத்தாபத்தியாற் பொருடருதலாலே தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணியாம். கோதாவரிக்கு இயல்பாகவே யுளதாகிய மகிமைக்குக் கோதாவென்னும் நாமசம்பந்தத்தையேதுவாகச் சம்பாவித்தலாலே ஏதுத்தற்குறிப்பேற்றவணியுமாம். இவற்றின் இலக்கணங்கள் முன்னே சொல்லப்பட்டன. (கஉ)

1505 கதிசென்றுபெ ருதிழி செனனம்பல வாழ்கிரி
யகநின் [1]றிருகோ டுளையா
வெதிரென்ப திலாமையி னிருகண்டியின் மாறியு
மிரையுங் கவரா திடைநா
ணுதிவெம்படை வேடுவ னதிருங்குர னீள்செவி
நுழைமுன் பறைகூ யுடனே
பொதியந்தரு மாநதி யயல்சென்றுற வூர்திரை
பொருதெண் கடலூ டெழுமே. (௪௬)

இரண்டுந் தொடர்.

வேறு.

1506 நெடும்ப னைக்கையின் மருப்பெனுந் தனுவையு நிமிர்த்தாங்கே
யடும்ப கட்டா சேகலு மகரமொன் றடுபோர்க்குக்
குடும்ப மோடுறக் கும்பமால் யானைகூன் கொலைக்கோட்டா
விடும்பை கூர்ந்திடக் கூற்றின்வாய்ப் பட்டதவ் விகன்மீனம்.(௫0)

1507 ஆனை மீனெனுந் திமியதன் பின்னராங் கமர்க்கெய்தா
வேனை யானையே கூற்றமா கியதிதற் கெனவேத்த
வூனை யுற்றுள கோட்டினாற் றுளைத்துடு நிலத்தேந்த
வானை யுற்றமீ னானதவ் வளக்கருள் வளர்மீனம். (௫௧)

1508 அந்த மீனையும் விழுங்கிய திமிதிமி யதன்பின்னர்
வந்து போர்க்கென வெதிர்தலு மூளைப்பிறை வளர்கோட்டா
லுந்த வேயுயிர் புறத்துற வுடல்கடை விழித்தீயால்
வெந்த காலையி லிரையென மிசைந்ததவ் விறல்வேழம். (௫௨)

1509 மிக்க மீன்களை விழுங்குமாண் டிமிங்கிலந் தமரோடு
மொக்க வேபொர வவற்றுடல் பிளந்துட லொழுக்கத்தாற்
றிக்க டங்களும் வெருவவே யளக்கரைத் திடர்செய்யா
[2]விக்க ரைப்புலத் தேறிய திடித்தச னியின்வேழம். (௫௩)

[பி-ம்.] [1] றொரு. சா. [2] வக்கரைப். சா.

1510 சேது நீண்டதொன் றுமெனத் திமிங்கில வுடல்கண்
மோது வெண்டிரை மூதுகுற நிரைத்ததி னடந்த
பாது காப்புறீஇ மேலைநாட் டிருத்திய படைகள்
காது போர்செயக் கொணர்ந்தெழு சேவகக் கரிமுன். (ருச)

1511 அண்டர் யாவரு மரக்கரு மறுகவே யமர்கூர்
சண்ட வாயுவி னெடுவட வாமுகக் தானும்
புண்ட ரீகமும் புரந்தரப் பொருமதப் பொருப்பு
மெண்டி சாமுகங் குலுங்கவே [1]குளிறிட வேறும். (ருரு)

இரண்டுந் தொடர்.

வேறு.

1512 இடியு மெழுகடலு முடுகு கடுவெளியு
மிடுமண் முழவினுடனே
வெடியு மடுமறலி கடவு பகடொலியும்
விலகு மொலிதழைடவே
கொடிய களிறுகுளி றவ மிகன்மறவர்
குரிசில் [2]செவியுளுறவே
யடிக ளுறைமலய நதியின் வடகரையி
லமர்செய் திடவணுகினன். (ருசு)

வேறு.

1513 வருமுனெதிர் சென்றதமர் பூண்ட
வருதிரை விலங்கினுயி ரார்ந்திடா
விருளொடு முழங்கிவெயர் வாங்கி
யெறிதருகு றந்திவலை தோய்ந்ததா
லொருகையிரு கொம்பின்மத மூன்றி
னுலவுபத மெண்பதொரு நான்குறு
வருளறு நமன்கொலிடி யாங்கொ
லணிமழை யினங்கொலென வாழ்ந்தமா. (ருஎ)

[பி-ம்.] [1] குளிறிடி யேறும். க. [2] செவியினுற. சா.

வேறு.

1514 ஒளிதுன்றிரு கோடுக ளுளைவுய்த்திட மார்பினை
யுழுதொண் சினமா றவுமே
யெளிதன்றிவ னுமென மதகுன்றமு [1]மோகையி
னிடியென் றிடியா வுடனே
வெளிபொங்கிய வேடனு நமதங்கையில் வாளுண
விளைவுண் டதிதா மெனவே
களிகொண்டமை யாதெதிர் குளிறுங்குர லாழ்கடல்
கதறுங் குரனேர் வருமே. (௫௮)

வேறு.

1515 குடபால்வெயிலுங்குணபான்மதியுங்குறையாமையினென்றும்
வடவாமுகமென்றிடையேவிழிமண்டழல்கால்வகைகொண்டே
தடமாறிருளெஞ்சிருபாலடைவஞ்சகமாமெனுநன்பா
ருடல்வேடுவனென்றுழல்வேழமதென்றுறுபேர்பெறுபண்பே. ()

1516 கயிலா யுதமொன் றதனு னகரங் களின்வீழ் [2]கதிகண்டே
யயிரா பதவன் பிடர்வா சவனன் றரிவார் சிறையின்றூ
மயிலார் வரையின் கணமா னதின்மந் தரநீ லமெனும்பேர்
பயிணுகமிரண்டொரு[3]நாதனின்மண்படர்வாழ்விவையென்பார் ()

1517 ஒருமா கடன்முன் கடைபோழ் தெழுநஞ் சுறு[4]நீ னிறமொன்றே
கருணா லயனெம் பெருமான் மலர்மென் கமலா சனமின்சே
ரருண்மால் குரவன் சிவனு மிவரன் றனுவே பரமென்பா
ரிருண்ஞானமுமிங்கிவனோடிஃதென்றெதிர்வாழ்விவையென்பார்.

1518 எழுபே ரொலியந் தரமீதுறவிங் கிவையா தெனநைந்தே
வழுவா விறலந் தகன்வா னவர்வண் சுடரா தவர்நின்றே
தொழுவாரணவன்பிடர்மேல்வருவன்றெழில்வாசவனென்போர்
கழுதா டவுமண் டமரா டுதல்கண் கொடுகா ணியவந்தார். ()

[பி-ம்.] [1] மோசையி. சா. [2] வதுகண்டே. சா. [3] தேவனின். சா.
[4] நீணிற. ச.

வேறு.

1519 குருதி[1]வைவ் நுதிக்கோட் டழல்விழிக் களிறுங்
கொடுந்தொழில் வேடனும் பகலே
பொருதிவ ணிறக்கிற் றேவர்பூ மாரி
பொழிந்திடத் துறக்கமேய் வதுதன்
பருதிமண் டலத்தைக் கிழித்[2]தெனு மதனாற்
பருவா லொடுமெதிர் கருமங்
கருதியா தவனுங் குடகட லடைந்தான்
கனையிரு ளடைந்ததிங் களினே. (சுரு)

பதினான்காவது:

வேழவருணனைச்சருக்கம் முற்றும்.

[பி-ம்.] [1] வெங், சா. [2] தெழு, சா.

ஸ்ரீ:

கரு. துணைப்படை வதைப்படு சருக்கம்.

1520 ஞானமா முனிவர் தென்கரை வதிப்ப
ஞாட்பினு [1]ணமனெடு மலைதற்
கானமா னவருஞ் சேணிடைக் கிரிமே
லமரினைக் காணிய வதிப்ப
வானவர் கால னென்னைமுன் முழங்கு
மாறெவன் பொருதியென் றெடெனு
வூனமொன் றில்லா வூதைநா தனைக்கூ
யுடற்றிநின் றிடியென வுரைத்தான். (க)

1521 சண்டவா யுவுநீ யரசுவா முன்னர்த்
தழங்கலென் னெனச்சிலா தலக்க
லுண்டையா னதைவன் றடக்கையா லொருசா
ருருட்டலு முருண்டது ககனத்
துண்டவெண் பிறைதோய் சுரும்பின்முட் டுதலுந்
துகள்பட வானவர் காலன்
கண்டுளங் கொதிப்பக் காலகா லனுமக்
கருத்தறிந் துளத்தினுட் கொதித்தான். (உ)

1522 கண்ணுளார் காண்பர் செவியுளார் கேட்பர்
கழறுவார் வாய்படைத் தவரே
மண்ணுளா ரிபக்கை கழறவும் படித்த
வரமுர மெனச்சுரர் வியப்பப்
புண்ணுளா ரழல்வே லுழைந்ததா மெனவே
புடைத்திடா வானவர் கால
னெண்ணுளா ரஞர்கூர்ந் தொருபொருப் பினையே
யிருகையாற் கிளைத்தெடுத் தெறிந்தான். (ங)

[பி-ம்.] [1]மதனெடு. கா.

1523 புன்றொழிலிதென மருப்பின்மேற் பொறுத்த
பொருப்பின்மேற் குளிறுதந் திகளே
வன்றடக் கையினு னிலத்திடா வொருகை
மடங்கலை வானவர் காலன்
வென்றிகொ ணிறத்திற் குறித்தெறிந் திடவும்
விசைத்தது பிறக்கிடு மளவிற்
பின்றிநின் றவர்தா மருப்பினைப் பிடுங்கப்
பிணமலை யாயதம் மடங்கல். (௪)

1524 ஓங்கல்வே ரெனவே திசைதொறு நான்ற
வுரககங் கணங்களெண் டிசையுந்
தேங்கிருட் பிழம்பைத் தெறுகதிர் மணியைச்
சிதறலாற் புலிப்பறழ் மூழையு
ளேங்குகின் றதனுற் பூநறுப் பனிற்று
மியற்கையாற் றடியிடி யினுடும்
பாங்கர்நுண் டுளிகூர் மழைக்குல மலையாய்ப்
பதிந்ததென் றுரைப்பர்வா னவரே. (௫)

1525 மருப்பின்மேற் கொண்ட பொருப்பினை மதமா
வானவர் காலன்மே லேவ
வுருப்பமுற் றவனே ரெழுவினுற் புடைப்ப
[1]வுடைந்துபின் னுண்டையாப் பராலா
யருப்பமாம் பான்மை நல்வினை தொலைந்தா
ராணிழந் தரும்பொரு டொலைந்து
கருப்பமாம் யாக்கை துப்புர விலதாய்க்
கழிந்ததொன் றெனும்பகு தியதே. (௬)

1526 ஈங்கினித் தொடுப்ப தியாதென மதமா
வெண்ணலும் விண்ணுற நிவந்தோர்
வேங்கைதா னிற்பப் பழம்பகை நாமம்
விளைத்ததொன் றெனப்பனைக் கையினுல்

[பி-ம்.] உடைந்த. ௬.

வாங்கியே யோச்ச வலக்கைமேற் கொண்ட
வாகைவேல் வைத்தில னிடக்கை
தாங்கிய சாதி யெழுவினு லெற்றச்
சன்னமா யினவவை யிரண்டும். (எ)

1527 சாதியாங் கணைய நீறலும் வேங்கை
தனிற்படு கணையமொன் றோச்ச
வோதிசால் வேழம் பணைக்கையாற் றடுத்தோங்
குபயகோ டுறவொடித் தோரோர்
பாதியாக் கியபின் னிருகடைக் கணிற்றீப்
பற்றவைத் திமையவர் வெருவக்
காதிய நிலையா லற்புதம் வேங்கை
கரிக்கணுற் கரியுமாம் வகையே. (அ)

1528 வாகைமா விகைதோய் வலக்கைமீ தெடுத்த
வைந்நுதிக் கொடியவே லதனைத்
தோகைவா கனத்தோன் சுரும்பிணை யிலக்காய்த்
துளைத்திட வெறிந்தவே லிதெனு
வோகைகூர்ந் தனனுச் சண்டவா யுவின்மே
லோச்சலு முருகனு யுதமே
யாகையா லதனைப் பணைக்கையா லணைத்தாங்
கதிதியு நீதியுங் குறித்தே. (கூ)

1529 தானவா னவர்தஞ் சேனைகா வலனுஞ்
சண்முக னேதியா கியநீ
வானவர் கால னிறத்தினைக் கிழித்து
மன்னுயிர் பருகென விடுப்ப
வானதுற் றதுபோற் றிரும்பியே யணுக
வவன்றடுத் தெதிர்விட வயலோர்
கானவ னிறத்தைத் துளைத்துயிர் பருகக்
கடிந்திரை யளித்ததக் களிறே. (கo)

இரண்டுந் தொடர்.

1530 செய்ததீ வினைவந் தடியிட வுயிர்க்குச்
செயிரிழை யணங்குபற் றினர்தா
மூய்யுமா றயலோர் மறியினை யறுத்தாங்
குயிர்ப்பலி கொடுத்ததே மானு
மையல்யா னையும்வே டனும்பொரு களத்து
வாளமர்க் கிடைப்படா வேடன்
மெய்யுண்மன் னுயிர்தான் வைந்நுதி யொளிறு
வேற்படைக் குணவதாம் வகையே. (கக)

1531 அந்தவே லொருமைக் குலத்துளாம் வேட
னுருயி ரினைப்பரு கியதால்
வெந்தநெஞ் சினொடு கொந்தன னாகி
வேறொரு வேற்படை விடுப்பக்
கந்தனு ருரிமைப் படைக்கல மதனைக்
கந்தனூர் புலத்தமைப் பதுபோற்
சந்தனு டவிசூழ் பனிவரைப் புறத்தோர்
சார்பினி லெடுத்தெறிந் ததுவே. (கஉ)

1532 நச்சிரா குவெனக் கடுங்கனல் பனிற்று
நயனமோ ரிரண்டுளா னதன்பின்
வச்சிரா யுதத்தைக் கரடமால் யானை
மத்தகத் தினிலெறிந் திடலுங்
தச்சிராக் கதரும் வெருவவே குருதி
சாடலுங் தளர்ந்திடா ததனைக்
கைச்சிரா யெனவே பறித்தவ னாத்துட்
காலன்வே லெனவழுத் தியதே. (கங)

1533 அழுத்தவே புறம்போழ் வச்சிரா யுதத்தை
யசைத்தவன் பறித்திடா நகைத்து
விழுப்புணூற் றனனென் றேகைகூர்ந் துதிரம்
விழித்தழ லொடுங்குதி கொளவே
கொழுத்தவெண் ணிணங்கூ ரதன்பனைக் கையினைக்
குறித்துற மறித்து மோச்சுதலு
முழுத்தவெண் ணிலவார் மருப்பினாற் றடுத்து
மூரிவா சவன்புலத் தெறியும். (கச)

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1935-ம்வருஷ ஆகஸ்டுமாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1935 ஆகஸ்டு			வரவு 1934 ஆகஸ்டு			விவரம்	செலவு 1935 ஆகஸ்டு			செலவு 1934 ஆகஸ்டு		
I General Section :							I General Section :						
(1) மாதச்சந்தாவகையில் வரவு...	50	...	...				(1) சங்கம்மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	117	9	2			
(2) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ...	406	11	...				(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	140	...	...			
(3) சங்கக் காலியிடத்திக்கு மாத வாடகை வரவு ...	30	...	...				(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ...	127	10	4			
							(4) Stationery, contingencies வகையிற் செலவு ...	2	8	...			

(4) **Miscellaneous** வரவு ...	2	3	...			
மொத்தம் ரூ ...	488	14	...	106	11	...
II EDITORIAL SECTION :						
(1) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக் சந்தா வகையில் வரவு ...	12	...	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	46	1	9			
மொத்தம் ரூ ...	58	1	9	128	14	...

(5) தபால், தந்தி வகையிற்செலவு	2	...	...			
மொத்தம் ரூ	389	11	6	1690	8	9
II EDITORIAL SECTION:						
(1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	85	...	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும்சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டிஜன்ஸிவகையிற் செலவு. ...	64	14	8			
(3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலிவகையிற் செலவு.	93	...	...			
(4) தபால் தந்திவகையிற் செலவு	8	...	...			
மொத்தம் ரூ ...	250	14	8	161	8	...

III Press Section :

(1) அச்சுக்கூலி வகையில் வரவு	91	...	...			
(2) காகிதக்கிரையம் வரவு ...	...	14	...			
(3) பைண்டிங்கூலி வகையில் வரவு ...	3	...	...			
மொத்தம் ரூ ...	94	14	...	134	...	...

III Press Section :

(1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	43	12	11			
(2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு.	7	15	6			
மொத்தம் ரூ ...	51	12	5	39	7	5

ஆகமொத்தம் வரவு ரூ. ...	641	13	9	369	9	...	ஆக மொத்தம் செலவு ரூ.	692	6	7	1891	8	2
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ. ...	1369	7	6	7588	7	9	மாதமுடிவில் மீதியிருப்பு ரூ ...	* 1318	14	8	6066	8	7
ஆகமொத்தம் ரூ. ...	2011	5	3	7958	...	9	ஆக மொத்தம் ரூ ...	2011	5	3	7958	...	9
							*By M. U. C. B. Pass Bk. Rs. 61-11- 8						
							M. R. C. C Bank Pass Bk. Rs. 521- 7- 3						
							Cash on hand Rs. 735-11- 9						
							1318-14- 8						

குறிப்பு:—மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 1318—14—8 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்கான Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரூ. 25011—5—0, (2) ரூ. 1050—0—0; மதுரையிலுள்ள இந்தியன் பாங்கில் வட்டிக்கான Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரூ. 10000, (2) ரூ. 10000, (3) ரூ. 5000, காரைக்குடி மகா-ள-ள-ஸ்ரீ ஸ. சுப. ராம. நாராயணன்செட்டியாரவர்களின் ரெங்கூன் அம்மேன் கடையில் வட்டிக்குச் சேர்க்கப்பட்டுள்ள முதல் ரூ. 1200, பணம் வசூலி அனுப்புவதற்காக வெளியே அனுப்பியுள்ள உண்டியலின் தொகை ரூ. 1000 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 12—9—'35.

LAKSHMINARAYANAN,
MANAGER, 10—9—'35.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1935-ம் வருஷ செப்டம்பர்மாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1935 செப்டம்பர்	வரவு 1934 செப்டம்பர்	விவரம்	செலவு 1935 செப்டம்பர்	செலவு 1934 செப்டம்பர்
			I GENERAL SECTION:		
I GENERAL SECTION:			(1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	123 8 ...	
			(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	140	
(1) மாதச்சந்தாவகையில் வரவு ...	50		(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ...	135 12 10	
			(4) Stationery contingencies வகையிற் செலவு ...	5 8 6	
			(5) தபால், தந்திவகையிற்செலவு	9	
(2) சங்கக்காலியிடத்துக்கு மாதவாடகை வரவு ...	30		(6) முனிசிபாலிடிக்கு வரி செலுத்தியது ...	10	

(3) **Miscellaneous** வரவு ...	...	11	...			
மொத்தம் ரூ ...	80	11	...	181	11	...
II Editorial Section:						
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவகையில் வரவு.	17	...	...			
(2) செந்தமிழ்ப்பத்திரிகைக்குச் சந்தாவகையில் வரவு ...	8	...	...			
(3) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	104	6	...			
(4) செந்தமிழ்ப் பழையபிரதிகள் விற்றவகையில் வரவு. ...	...	8	...			
மொத்தம் ரூ ...	129	14	...	176	3	...

(7) சங்கமாபீசு சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலிவகையிற் செலவு.	14	...	...			
மொத்தம் ரூ ...	437	13	4	619	14	10
II Editorial Section:						
(1) ஷ ஆபீஸ் சிப்பந்திசட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	85	...	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கன்டின்ஜன்ஸி வகையிற் செலவு ...	...	9	...			
(3) ஷ சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு ...	84	11	...			
(4) தபால், தந்திவகையிற் செலவு. ...	10	...	...			
மொத்தம் ரூ ...	180	4	...	118	4	...

III Press Section:	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
(1) அச்சுக்கூட வகையில் வரவு.	72	8	...			
(2) பைண்டிங்கூட வகையில் வரவு ...	3	8	...			
மொத்தம் ரூ ...	76	...	...	63	...	...

III Press Section:	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
(1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	37	1	...			
(2) ஷை ஆபீஸ் **Stationery contingencies** வகையிற் செலவு.	1	15	3			
மொத்தம் ரூ. ...	39	...	3	37	13	...

ஆகமொத்தம் வரவு ரூ ...	286	9	...	420	14	...	ஆக மொத்தம் செலவு ரூ ...	657	1	7	775	15	10
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ ...	1318	14	8	6066	8	7	மாத முடிவில் மீதி இருப்பு ரூ ... *	948	6	1	5711	6	9
ஆகமொத்தம் ரூ ...	1605	7	8	6487	6	7	ஆகமொத்தம் ரூ ...	1605	7	8	6487	6	7

*By M. U. C. B. Pass Book Rs.	61–11– 8
M. R. C. C. Bank Pass Book Rs.	371– 7– 3
Cash on hand Rs.	515– 3– 2
	948– 6– 1

குறிப்பு:—மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 948-6-1 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதலனங்கள் (1) ரூ. 25011-5-0; (2) ரூ. 1050-0-0; மதுரையிலுள்ள இந்தியன்பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதலனங்கள் (1) ரூ. 10000; (2) ரூ. 10000; (3) ரூ. 5000; காரைக்குடி மகா-ள-ள-ஸ்ரீ சா. கப. ராம. நாராயணன்செட்டியாரவர்களின் செக்கடன் அப்மென் கடையில் வட்டிக்கும் சேர்க்கப்பட்டுள்ள முதலனம் ரூ. 1200. பணம் வசூலி அனுப்புவதற்காக வெளியே அனுப்பியுள்ள உண்டியலின் தொகை ரூ. 1000 ஆகும்.

Audited and found correct,

V. S. RAMASWAMI, AUDITOR, 8—10—'35.

LAKSHMINARAYANAN,

MANAGER, 5—10—'35.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது உரையுடன்	0	4	0
2.	கணநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷ)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	அகப்பொருள்விளக்கம்	1	4	0
35.	*திருமந்திரநூறுபாட்டுக்குரை			
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்)	1	0	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	கடைவள்ளலார்காலம்	0	6	0
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51.	மதங்கசூளாமணி	1	0	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர்	0	6	0
	ஷை ஆங்கிலத்தில்	0	6	0
54.	அரும்பொருள்விளக்க நிகண்டு ...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ. 4—8—0. இதுவரை 32 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.